44

# வ.வே.ஸு. ஐயர்

V2:5Y7M81
N46
105134



# வ.வே.ஸு. ஐயர்

தி.சே. சௌ. ராஜன்

No-105134

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள். ஜூன். 1992

செப்பனிட்டு முடித்த நாள். ஜூலை. 1992

சரிபார்க்கும் மு.பா.எ. கையொப்பம். 7/7/92

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்.

# வ. வே. ஸு. ஐயர்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

உரிமை பதிவு]

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை

[விலை ரூ. 1/-

44368

முதற் பதிப்பு : 1946

105134

Printed at the Madras Law Journal Press, Mylapore, Madras.
MS. 76—20th June, 1946—1500 c.



# முன்னுரை

தமிழ் நாட்டில் விளைந்த வீரத்தைப்பற்றிப் பழஞ் செய்யுட்களிலே படிக்கிறோம். சமீபத்தில் நிகழ்ந்த இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் வீரத்தை வெளிப்படுத்திய இந்திய சுதந்தரப் பெரும்படையின் புகழ் காவியத்துக்குச் சுவை கொடுப்பதாக நிலவுகிறது. அந்தப் படையில் பல தமிழர்கள் சேர்ந்து வீரச் செயல் பல புரிந்தனர் என்ற செய்தி தமிழனுடைய வீரம் இன்னும் மங்கிப் போகவில்லை என்பதை உணர்த்துகின்றது.

வீர உணர்ச்சியும் தேசபக்தியும் இணைந்து ஒன்றுபட்டு விளங்கிய உள்ளம் படைத்த தமிழர் வ. வே. ஸு. ஐயர். படைக்கலப் பயிற்சியும், வீரச் செயலும் சுதந்தர யுத்தத்திற்கு இன்றியமையாதவை என்ற கொள்கையையுடைய ஒரு சிறு கூட்டத்தை லண்டனில் நிறுவி வளர்த்த தலைவர்களுள் அவர் ஒருவர். அவர் வாழ்க்கையோ வீரம் நிறைந்தது.

மகாத்மா காந்தியடிகள் சுதந்தரப் போரைப் புதிய திசையில் திருப்பிய பிறகு வ. வே. ஸு. ஐயர் ஒரு தபஸ்வி ஆனார். மகரிஷி என்றுகூட அவரைத் தமிழர் அழைக்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் தியாக உணர்ச்சியும் கலையுள்ளமும் பெற்று நாட்டின் முன்னேற்றத் துறையில் உழைக்கும் இளைஞர்களை உண்டாக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு ஒரு குருகுலத்தை ஸ்தாபித்தார்.

பல பாஷை பயின்றவர் அவர். அந்தப் பேரறிவைத் துணையாகக் கொண்டு தமிழை வளப்படுத்தத் தொடங்கினார். கம்பராமாயணத்தின் இலக்கியச் சுவையைத் தெளிவாக்கி விமரிசனம் செய்யத் தொடங்கினார். அற்புதமான சிறு கதைகளை எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவினார்.

அவர் இருந்திருந்தால் ஒரு தவமுனிவராக, கலையுதவும் வள்ளலாக விளங்கியிருப்பார். தமிழுலகம் அவர் தரும் அரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும். இல்லையே! தமிழ்நாட்டின் துரதிருஷ்டந்தான்.

வ. வே. ஸு. ஐயருடன் நெருங்கிப் பழகிய நண்பர் டாக்டர் தி. சே. சௌ. ராஜன் லண்டனில் இருந்த தேசபக்தர் கூட்டத்தில் சேர்ந்தவர். அவர் கலைமகளில் வ. வே. ஸு. ஐயரைப்பற்றித் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

ஜாதகம் முதல் இரங்கற்பாட்டு வரையில் ஒன்று விடாமல் எழுதுவதுதான் சரித்திரம் என்ற நினைப்பு மாறிவரும்காலம் இது. ரஸமான சம்பவங்களைக் கோவைப் படுத்தி, அச்சம்பவங்களினூடே சரித்திர நாயகரின் இயல்பு கரந்து நிற்கும்படியாக எழுதுவதைச் சிறந்த சிருஷ்டியென்று மதிக்கும் காலம் இது. இந்தச் சரித்திரம் அப்படி அமைந்தது; படிக்கத் தொடங்கினால் கடைசி வரையில் படித்துவிட்டுக் கீழே வைக்கும்படியாக உள்ளது. விஷயம் ரஸமாக இருப்பதோடுகூட நடையும் கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதாய் ஜீவனுடன் விளங்குகிறது. வாசகர்களின் கருத்தைத் தன்னோடு வேகமாக இழுத்துச் செல்லும் இயல்பு இந்தப் புஸ்தகத்தில் இருப்பதற்குக் காரணம் இதுதான்.

கலைமகளில் வந்த காலத்திலேயே தமிழர்கள் சுவைத்துப் பாராட்டிய வரலாறு இது. இப்போது தொகுத்துப் புஸ்தகமாக வெளியிடுகிறோம். தமிழர்கள் வரவேற்பார்கள் என்ற உறுதி எங்களுக்கு உண்டு.

12-6-45.

கி. வா. ஜகந்நாதன்



# வ. வே. ஸு. ஐயர்

## 1

### எட்டிக்குப் போட்டி

வேவு பார்ப்பது ஒற்றர்களின் கடமை. பண்டைக் காலத்தில் அரசு புரிந்த மன்னர்கள் ஒற்றர்களின் சேவையை இன்றியமையாத ஓர் அரசியல் சாதனமாகக் கருதி அவர்களைப் போற்றி வந்திருக்கிறார்கள். அரசியல் அமைப்பு எவ்விதம் இருப்பினும் மன்னர் ஆட்சியாக இருந்தாலும் சரி, அல்லது குடியரசு அமைப்பைக் கொண்டதானாலும் சரி, ஒற்றர்களின் தொண்டு அவசியம். அரசனுக்கோ அல்லது அரசிற்கோ தீமை அணுகாதபடி, பல நாடுகளில் சென்று தங்கி, அங்கு நடக்கும் அரசியல் முறைகள், பொது இயக்கங்கள், வியாபாரப் போக்குகள், படையெழுச்சிக்கான வேலைகள் இவைகளைக் கவனித்துத் தத்தம் அரசாங்கத்திற்கு ரகசியமாகச் செய்தி அனுப்புவது முதலிய வேலைகளில் ஒற்றர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இம்முறை இன்னும் நடந்துவருகிறது. ஒவ்வொரு ராஜாங்கத்தின் தலைநகரிலும் சுதந்தரமாயுள்ள மற்ற நாடுகளின் தூதர்கள் இருக்கிறார்கள். போர் துவக்குவதற்கு முன் இவர்கள் அந்நாடுகளை விட்டு அகன்றுவிடுவார்கள். இவையெல்லாம் வெட்ட வெளிச்சமாக நடைபெறும் ஆட்சி முறை அங்கங்கள். தங்கள் தேசத்தை விரோதிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் முறையில் ரகசியமாக வேலை செய்யும் துரோகிகளின் கும்பல் எல்லா நாடுகளிலும் இருந்து வருகிறது. இந்திய சரித்திரத்தில் மீர் ஜாபர் என்கிற வங்காளியும்,

தற்காலத்தில் ஐந்தாம் படை என்று பெயர் பெற்று விளங்கும் கூட்டத்தினரும் எதிரிகளுக்குத் துப்புக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டவர்களே.

இவர்களைத் தவிர, போலிஸ் நிர்வாகத்தில் வெளிப்படையாக அந்தக் கூட்டத்தில் சேராத உளவுகாரர்கள் இருக்கிறார்கள். பழக்கம் இல்லாதவர்களுக்கு அவர்களைக் கண்டுபிடிப்பது முடியாத வேலை. ஆனால் அவர்களுடைய கண்காணிப்பிற்கு ஆளான ஒருவன் வெகு சீக்கிரத்தில் அவர்களைக் கண்டு பிடித்துவிடுவான். குறிப்பிட்ட ஒருவன் நம்முடைய கண்ணிற்கு அடிக்கடி தென்படுவது, நாம் அவனைத் திரும்பிப் பார்க்க நேரிட்டால் அவன் தன் முகத்தை வேறு புறத்தில் திருப்பிக்கொள்வது, நாம் ஒரு வீட்டிற்குள் நுழைந்தால் அக்கம்பக்கத்து வீடுகளில் மறைந்து ஒண்டியிருப்பது, வீட்டை விட்டுப் போன பிறகு பிள்ளைகுட்டிகளிடம் விசாரிப்பது,—இவைகளால் உளவுகாரனைத் தெரிந்துகொள்ளலாம். இவர்கள் பின் தொடர்வது இருவித நோக்கத்தோடு ஆகும். ஒன்று, சந்தேகிக்கப்பட்ட மனிதர் இந்தத் தொல்லைக்குப் பயந்து தாம் செய்துகொண்டிருக்கும் வேலையினின்று நீங்கிக் கொள்ளக் கூடும்; அல்லது அவர்களே உளவாளிகளை நேசித்து அவர்கள் அறிய வேண்டியவைகளை அவருக்குத் தெரிவித்து விடுவதும் உண்டு. இரண்டாவது, சந்தேகப்பட்டவரிடம் மற்றவர்கள் அணுகா வண்ணம் அச்சத்தை உண்டாக்குவது.

தேசீய இயக்கத்தில் ஈடுபட்ட பலருக்கு இந்த அநுபவம் அதிகம். காலஞ் சென்ற தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளைக்குப் பல வருஷங்கள் இந்த அநுபவம் உண்டு. அதிகாரிகளும் இந்தத் தொடர்பை அனுப்பினால் விட்டதாகவும் தெரியவில்லை. அதற்காக அவர் உளவாளியிடம் நட்புக் கொண்டார். அவன் பின் தொடர்ந்து அலைந்து திரிந்து தெரிந்துகொள்ள வேண்டிய சங்கதிகளை அவனுக்கு வலுவில் தாமாகவே



சொல்லிவிடுவார். இருவருக்கும் நட்பு வளர்ந்தது. உளவுகாரனைச் சர்க்கார்ச் செலவில் தம்முடைய ஊழியனாக வைத்துக்கொண்டுவிட்டார்.

ஒரு சமயம் அவர் திருச்சிக்கு என்னைக் காண வந்தபொழுது அவருடைய மூட்டை முடிச்சுகளைத் தூக்கிவர ஒரு வேலைக்காரனையும் அழைத்து வந்தார். குடும்ப வாழ்க்கையை மிகுந்த கஷ்டத்துடன் நடத்தி வந்த அவருக்கு வேலைக்காரன் வைத்துக்கொள்ளும் அதிருஷ்டம் இல்லை என்பது எனக்குத் தெரியும். "ஏது, வேலைக்காரன் வைத்துக்கொள்ளும் பாக்கியம் தங்களுக்கு ஏற்பட்டது?" என்றேன்.

"எல்லாம் காருண்ய கவர்மெண்டாரால்தான்" என்று அவர் பதிலளித்தார்.

நாங்கள் லண்டனில் நடத்தி வந்த 'இந்தியா விடுதி'யில் யாராகிலும் புதிதாகச் சேரவேண்டி வந்தால் அவர்களைச் சில நாட்கள் விடாது கவனிப்பது எங்களுக்கு வழக்கம். அந்த விடுதியில் இருபது பேர்கள் தங்கக் கூடும். எனினும் சாசுவதமாகத் தங்கினவர்கள் ஏழு பேர்களே. அக்காலத்தில் லண்டனில் இந்தியர்கள் சாப்பிடும் உணவு கிடைக்காது. ஆனால் எங்கள் இருப்பிடத்தில் இந்திய உணவுதான் சமைத்து வந்தோம். மாதம் ஒரு முறை அல்லது இரண்டு முறை நடத்தும் எங்கள் சங்கக் கூட்டத்திற்குக் குறைந்தது முப்பது இந்தியர்களாவது வருவார்கள். அங்கத்தினர்கள்தாம் வர வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை. இந்த முப்பது பேர்களில் குறைந்தது பாதிப் பேராவது இந்திய உணவு ஒரு வேளையாகிலும் சாப்பிட்டுப் போகலாம் என்று வருவார்கள். ஆனால் பெரும்பாலோர் அங்கே தங்கியிருக்க மாட்டார்கள்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. லண்டனுக்குப் படிக்க வரும் இளைஞர்கள் சீமான் வீட்டுப் பிள்ளைகள்; பணம் செலவு செய்வதில் கவலையற்றவர்கள். கட்டுப்பாட்டுடன் இருக்கும் எங்கள் விடுதி

யிலோ நிபந்தனைகள் அதிகம். குறிப்பிட்ட நேரத்திற்கு வரவேண்டும்; இரவில் தகுந்த காரணம் இன்றி வெளியே தங்கக்கூடாது. வீட்டில் வேலை செய்வதற்கு ஆங்கிலச் சிறுமிகள் இல்லை. சிக்கனமான முறையில் வாழ்வு நடத்த வேண்டும். உண்ணும் பொழுதும் ஓய்வு நேரங்களிலும் இந்திய விடுதலை இயக்கத்தின் தத்துவங்கள், கையாள வேண்டிய முறைகள், இந்தியப் பத்திரிகைகளில் கிடைக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய வாக்குவாதங்கள், இவை போன்ற காரியங்களையே செய்துகொண்டிருப்போம். மேலும் உளவுப் போலீஸ்காரர்களின் தொல்லை வேறு. இதனால் விடுதியில் வசிப்போர் தொகை ஒருபோதும் ஏழு பேர்களுக்குமேல் போகவில்லை. வேலைக்காரர்கள் இல்லாததால் வீடு நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டு, சாமான்கள் ஒழுங்காகவும், கண்ணைக் கவரும்படியாகவும் இல்லை என்று பல நண்பர்கள் முறையிட்டதன் பேரில், சுறுசுறுப்பும் நல்ல முகவெட்டும் உள்ள ஒரு வேலைக்காரியை ஏற்பாடு செய்தோம். வீடு சுத்தமானதைத் தவிர எங்கள் எண்ணிக்கை அப்பொழுதும் அதிகப்படவில்லை.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. 1909-ஆம் வருஷம் கோடைக் காலத்தில் ஒரு நாள் சாயங்காலம் எங்கள் விடுதிக்கு ஒரு புதிய பேர்வழி வந்து சேர்ந்தார். அவரை முன்பின் தெரிந்தவர் ஒருவரும் இல்லை. தம்மை இன்னார் என்று தெரிவித்துக் கொள்வதற்குக் கடிதமோ சிபார்சோ ஒன்றும் அவர் கொண்டு வரவில்லை. மூட்டை முடிச்சுகளுடன் வந்து இறங்கியவர் மராட்டியர். 'பிரபு' என்னும் உள் வகுப்பினர். விநாயக ஸாவர்க்கருடன் மராட்டியில் கொஞ்ச நேரம் பேசினார். பிறகு அவருடைய சிபார்சின் பேரில் அந்த வீட்டிலேயே தங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

வெளிப்பார்வைக்கு அவர் நுட்ப புத்தியுள்ளவராகக் காணப்படவில்லை. வயசு முப்பது இருக்கும்.



ஐந்தாறு பாஷைகளில் பேசவும் எழுதவும் தெரிந்தவர். பம்பாயில் கோர்ட்டுகளில் தர்ஜமா செய்யும் பதவியில் உள்ளவர். ஒரு வருஷ லீவு எடுத்துக் கொண்டு, 'பல் வைத்தியம்' கற்றுக்கொள்வதற்காக லண்டன் வந்ததாகத் தெரிவித்தார். மறுநாளே, 'லண்டன் ஆஸ்பத்திரி'யில் பல் மருத்துவம் பயிலுவதற்குக் கட்டணம் கட்டிப் பெயரையும் பதிவு செய்து கொண்டார்.

சில நாட்கள் வரையில் தினந்தோறும் காலையில் என்னுடன் உண்டு என்னைப் போலவே தாமும் ஆஸ்பத்திரி வேலை கற்பதற்குப் புறப்படுவார். பிறகு கொஞ்சங் கொஞ்சமாகத் தினசரி காலை நேரத்தில் புறப்படாமல் வெகுநேரம் படுக்கையை விட்டுக் கிளம்பாமல் இருப்பார். இரவிலும் வெகு நேரம் சென்று வீடு திரும்புவார். வீட்டில் வேலை செய்யும் சிறுமியையும் தம்முடன் அழைத்துச் செல்ல ஆரம்பித்தார்.

விநாயக ஸாவர்க்கரிடம் அவரைப் பற்றி நாங்கள் முறையிட்டபொழுது, அவருடைய நடத்தையைப் பற்றி ஸாவர்க்கர் ஆச்சரியப்படவில்லை; "பிரபுக்கள், பரம்பரையாகச் சுகவாசிகள்" என்று சொல்லி விட்டார்.

ஆனால் வீட்டில் வேலைக்காரியை அல்லவா கெடுத்துவிடுகிறார்? எங்களுக்கு நேரத்தில் சமையல் ஆகிறதில்லை. எங்கள் அறை, படுக்கை, நாற்காலி, மேஜை, இவைகள் துடைக்கப்படுவதில்லை. இவர்கள் நட்பு அதிகப்படவே எங்கள் வீட்டு வேலை பாழாகி விட்டது. கடைசியாக வேலைக்காரியை நீக்கி விட்டோம்.

எங்கள் மராத்தி நண்பர் பெயர் கீர்த்திகர். வேலைக்காரி நீங்கியதை அவர் லக்ஷ்யம் செய்பவராகத் தோன்றவில்லை. நாங்கள் இருந்த தெருவில் சில வீடுகளுக்கு அப்பால் அவ்வேலைக்காரிக்குத் தனி ஜாகை ஒன்று ஏற்படுத்திக் கொடுத்து அவளைத் தம் ஆதரவில்

வைத்துக்கொண்டுவிட்டார். ஆனாலும் அவர் எங்கள் விடுதியை விட்டு மாத்திரம் போகவில்லை. 'சுதந்தர இந்தியா சங்கத்'தில் தாமும் ஓர் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டார். எங்களுடைய கூட்டங்களுக்குத் தவறாமல் வருவார். தாமும் பேசுவதில் கலந்துகொள்வார். சங்கச் செலவுக்காகச் சந்தாவைத் தவிர மாதம் ஒரு பவுன் நன்கொடை வேறு கொடுத்து வந்தார். இப்படிப்பட்டவரை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்ல முடியாமல் போயிற்று.

சில மாதங்கள் கழிந்த பிறகு நான் 'லண்டன் ஆஸ்பத்திரி' யில் சென்று விசாரித்ததில், கீர்த்திகர் சேர்ந்த முதல் வாரம் மட்டும் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் பிறகு நின்றுவிட்டதாகவும் தெரிந்து கொண்டேன். என் சந்தேகத்தை ஐயருக்குத் தெரிவித்தேன். "இந்தக் கீர்த்திகர் மோசமான பேர்வழிபோல் இருக்கிறது. இவர் படிப்பதற்காக இங்கு வரவில்லை என்பது நிச்சயம். நம்மையெல்லாம் பின் தொடர்ந்து தொல்லை செய்யும் 'ஸ்காட்லண்டு யார்டு' உளவுகாரர்கள் இவரைக் கவனிப்பதில்லை. இவர் வேலையில்லாமல் இந்த ஊருக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. இவரை நாம் சற்றுக் கவனிக்க வேண்டும்" என்று வற்புறுத்தினேன். நான் நினைத்தது போலவே கீர்த்திகரைப் பற்றிய சந்தேகம் ஐயர் உள்ளத்திலும் குடிகொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு கீர்த்திகர் நாடகம் பார்ப்பதற்குத் தம் ஆங்கிலச் சிறுமியுடன் சென்றார். அந்தச் சமயத்தில் ஐயர் கீர்த்திகருடைய அறைப்பூட்டுக்கு மறு சாவி போட்டுத் திறந்து உள் நுழைந்து அவருடைய பெட்டி படுக்கை எல்லாவற்றையும் சோதனை போட்டார். கீர்த்திகர் போலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டி எங்கள் சங்கத்தின் அவ்வாரத்திய நடவடிக்கைகளை விவரமாக எழுதியிருந்த ரிபோர்ட் அகப்பட்டது. அதை மட்டிலும் கைப்பற்றிக்



கொண்டு மறுபடியும் அறையைப் பூட்டிவிட்டு என்னிடம் வந்து அந்தக் கடிதத்தைப் படித்துக் காண்பித்தார்.

'இனி என்ன செய்வது?' என்பதைப்பற்றி விநாயக ஸாவர்க்கரிடம் கூடி ஆலோசனை செய்தோம். கீர்த்திகரை வீட்டை விட்டு வெளியே அனுப்பக்கூடாது என்று முடிவு செய்தோம். அவர் செய்து வரும் வேலையை அவர் விடாமல் செய்து வர வேண்டும். ஆனால் அவர் அனுப்பும் ரிபோர்ட்டுகளை ஐயர் பார்த்துத் தணிக்கை செய்த பிறகே அனுப்பவேண்டும். போலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் விவரங்கள் எங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதற்குக் கீர்த்திகர் சம்மதிக்க வேண்டுமே; அதுதான் கவலை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டால் அவருக்கு உத்தியோகம் முடிந்து விடும். திரும்பவும் பம்பாய்க்குப் போக வேண்டியதைத் தவிர வேறு வேலை லண்டனில் கிடையாது. அப்படி அவர் போய்விட்டால் அவரைக் காட்டிலும் திறமையுள்ள ஓர் உளவாளி ஏற்படலாம். அவனைக் கண்டுபிடிக்க அநேக நாட்கள் ஆகக் கூடும். இதையெல்லாம் எண்ணியே கீர்த்திகரை வெளியே அனுப்பக்கூடாது என்ற முடிவுக்கு வந்தோம்.

அன்றிரவு கீர்த்திகர் கூத்துப் பார்த்துவிட்டு வீடு திரும்பியவுடன் ஐயர் அவருடன் கலந்து பேச எண்ணி, தம்மிடம் இருந்த கைத் துப்பாக்கி ஒன்றில் ரவைகள் போட்டுத் தயாரித்துத் தம் பையில் போட்டுக் கொண்டார். அவருடைய அறைக்குள் சென்று அன்றிரவு நாடகத்தின் விவரங்களைக் கேட்பவர் போல முதலில் பேசிய பிறகு, அவர் லண்டனில் செய்துவரும் வேலைகளைப்பற்றி விசாரித்து, கடைசியில் போலீஸ்காரர்களின் உளவாளியாக அவர் காலங்கழிப்பதைப் பற்றி இகழ்ந்து பேசினார். கீர்த்திகர் தமக்கு ஒன்றும்

தெரியாதென்றும், தாம் அந்த வேலை செய்யத் துணியாதவரென்றும் சாதித்தார். ஐயர் விடுகிற வழியாகத் தெரியவில்லை. இவர் குற்றம் சாட்டுவதும் அவர் மறுப்பதுமாகச் சுமார் அரை மணி நேரம் சென்ற பிறகு, ஐயர் அந்த அறைக் கதவை உள்ளிருந்து தாழிட்டுக் கொண்டார். இதன் முடிவு என்ன ஆகும் என்ற கவலையுடன் நான் கதவுக்கு வெளியில் காத்திருந்தேன்.

ஐயர் தம் கைத் துப்பாக்கியைப் பையிலிருந்து எடுத்து, கீர்த்திகரிடம் அதைக் காண்பித்து, "இது என்ன தெரியுமா ?" என்று கேட்க, அவரும் தெரியும் என்றார்.

"இது வெறும் துப்பாக்கியல்ல; ஆறு ரவைகள் கொண்டது. அடுத்தடுத்து ஆறுதரம் சுடக்கூடியது. நீ உண்மையைச் சொல்லாவிடில் உன்னை இங்கேயே சுட்டு முடிவு செய்துவிட எண்ணி வந்திருக்கிறேன். நீ உள்ளதைச் சொல்லிவிட்டால் நான் உனக்கு ஒரு தீங்கும் செய்வதில்லை" என்று சொல்லியும் அவர் மறுத்தார்

உடனே மற்றொரு பையில் வைத்திருந்த ரிபோர்ட்டை அவரிடம் கொடுத்து, "இது உன் கையெழுத்து என்று எனக்குத் தெரியும். நீ அனுப்புவதற்காகத் தயாரித்ததை நான் உன் பெட்டியைத் திறந்து எடுத்திருக்கிறேன். இதையும் நீ மறுப்பதாக இருந்தால் உன் முடிவு இப்பொழுதே என் கையால் நேரிடும்" என்றார்.

இதைக் கண்டவுடன் கீர்த்திகர் திகிலடைந்து ஐயருடைய இரு பாதங்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினார். அன்றுமுதல் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் எங்களுடனே வசிக்கவேண்டும் என்று ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒன்று, அவர் வாரந்தோறும் அனுப்பும் ரிபோர்ட்டை ஐயர் பரிசீலனை செய்த பிறகே அனுப்பவேண்டும். இரண்டாவது,



அவர் லண்டனை விட்டு நீங்கும்வரையில் தம்முடைய சம்பளத்திலிருந்து மாதம் இரண்டு பவுன் சந்தா எங்கள் சங்கத்திற்குக் கொடுத்து வரவேண்டும். இந்த இரண்டுக்கும அவர் உடன்பட்டால் ஒழிய அவருக்கு வேலை போய்விடும் ஆகையால், அவர் அதற்கு உடன்பட்டு எங்கள் விடுதியில் இருக்கும் வரையில் தம் உறுதி மொழியைக் காப்பாற்றினார். இப்படிச் சில மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் சாயங்காலம் எதிர்பாராதபடி ஓர் இளைஞர் ஒரு கைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு எங்களிடம் வந்தார். அவருக்குச் சுமார் இருபது வயசு இருக்கலாம். மெலிந்த உடல். முகத்தில் சுறுசுறுப்பும் புத்தி கூர்மையும் ததும்பிக்கொண்டிருந்தன. இந்தியாவிலிருந்து கப்பலில் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்த களைப்பினால் உடல் மெலிந்து போனதாகவும் தம் பெயர் திருமலாச்சாரி என்றும், தாம் திருவல்லிக்கேணி என்றும் தெரிவித்தார். சாப்பாட்டிற்கு ஏதாகிலும் வழி தேட வேண்டிய நிலையில் இருந்தார். சென்னையில் அந்நாளில் பிரசுரமாகி வந்த இந்தியா என்னும் வாரப் பத்திரிகை மூலம் லண்டனில் ஐயருடைய கோஷ்டியார் தேச விடுதலைக்காகப் பாடுபட்டு வருவதைத் தெரிந்துகொண்டு தம்மால் இயன்ற பணியை அவர்களுடன் சேர்ந்து செய்ய எண்ணி வந்ததாகவும் கூறினார். 'இவரைக் கொண்டு என்ன செய்வது?' என்பது எங்கள் கவலை.

பாரிஸிலிருந்த தனவந்தரான ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா தேச விடுதலைக்கு உழைப்பவர்களுக்காக ஒரு பெரிய நிதி சேமித்து வைத்திருப்பதாக உலாவி வந்த வதந்தியை நம்பியே திருமலாச்சாரியார் வந்துவிட்டார். தமக்கு எந்த வேலை கொடுத்தபோதிலும் செய்ய உறுதி கொண்டிருப்பதாகவும் எப்படியாகிலும் தம்மை ஆதரிக்க வேண்டும் என்றும் சொல்லியதன் பேரில், எங்களுக்குச் சமையல் செய்வது,

கடைகளுக்குச் சென்று தேவையானவைகளை வாங்கி வருவது, ஒழிந்த நேரத்தில் எங்கள் சங்கத்தில் அங்கத்தினர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பல தொண்டுகளைச் செய்வது என்று முடிவு செய்தோம். அவரால் ஏற்படும் செலவை அங்குள்ள மற்ற ஏழு பேர்களும் பகிர்ந்து கொடுக்கவும் ஒப்புக் கொண்டோம். அன்றியும் புதிதாக வலுவில் கீர்த்திகரைப் போலவே வந்தபடியால் சற்று மனத்தில் அவரைப் பற்றிய சந்தேகமும் தீரவேண்டி இருந்தது. ஒரு சமயம் அதிகாரிகளுக்காக உளவு வேலை செய்ய வந்தவரோ என்கிற அச்சம் ஒழிவதற்காக எங்களில் ஒருவரை ரகசியமாக அவரைக் கவனிக்கும்படி ஏற்பாடும் நடந்தது.

இரண்டு மாதம் அவரைக் கவனித்து வந்ததில் நல்ல சீலமுள்ள இளம் தேசபக்தர் என்பதை அறிந்து கொண்டோம். முகங்கோணாமல் இட்ட வேலையை ஆர்வத்துடனும் திறமையுடனும் செய்வதில் அவருக்குள்ள ஆற்றல் நன்கு புலனாயிற்று. ஆனால், 'எவ்வளவு காலம் இவரைக் காப்பாற்றுவது? இதற்கு முடிவு என்ன?' என்பதை யோசனை செய்து அவருடைய நுண்ணறிவிற்கும், தேசீய உணர்ச்சிக்கும் உரிய வேலை ஒன்றை ஐயர் கண்டு பிடித்தார்.

லண்டன் போலீஸ் அதிகாரிகளுக்கு எங்கள் வேலைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் எவ்வளவு கவலை இருக்கிறது என்பதற்குக் கீர்த்திகர் பொருட்டு அவர்கள் செலவழித்த தொகை ஓர் அத்தாட்சி. கீர்த்திகர் செய்து வரும் வேலையும் அவர் கொடுக்கும் வார ரிபோர்ட்டும் எவ்வளவு மட்டில் நம்பக்கூடியன என்று அறிய அவர்கள் ஆவல் கொள்ளக் கூடியவர்கள். ஆகையால் எங்கள் விடுதியில் தங்கியுள்ள மற்றொருவர் இந்த வேலையைச் செய்ய முன் வந்தால் அதிகாரிகள் அவருக்குத் தகுந்த ஊதியம் அளிக்கக்கூடும் என்று ஊகித்து, திருமலாச்



சாரியாரை "ஸ்காட்லண்டு யார்டு" பெரிய துரையைப் போய்ப் பார்க்கும்படி ஐயர் தூண்டியதன் பேரில், அவரும் சென்று துரையைப் பார்த்துவிட்டு வந்தார். போலீஸ் அதிகாரிகளுக்கு 'இந்தியர் விடுதி'யில் நடக்கும் எல்லாவற்றையும் தாம் தெரிவிப்பதாகவும் ஆறு மாத காலத்திற்குத் தம் வேலைத் திறத்தைக் கண்டு பிறகு இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கலாம் எனவும், முதலில் மாதம் ஒன்றுக்கு ஐந்து பவுன் கொடுத்தால் போதும் எனவும் முடிவு செய்துகொண்டு உளவாளி உத்தியோகத்தில் அமர்ந்தார். வாரம் ஒரு முறை குறிப்பிட்ட இடத்தில் பெரிய துரையைத் தனித்துக் கண்டு பேசி விவரங்கள் சொல்வதும், அச்சிட்ட துண்டுப் பிரசுரங்கள், கடிதங்கள் முதலியவற்றில் கிடைத்த வரையில் அவரிடம் கொடுப்பதுமான வேலைகளைச் செய்து வந்தார்.

கீர்த்திகர் அனுப்பும் ரிபோர்ட்டைத் தணிக்கை செய்வது, திருமலாச் சாரிக்குத் தேவையும் உசிதமுமான சங்கதிகளையோ பிரசுரங்களையோ கொடுத்தனுப்புவது ஆகியவை சம்பந்தப்பட்ட வேலைகள் யாவற்றையும் ஐயரே செய்து வந்தார். திருமலாச் சாரியாருக்குக் கிடைத்த ஊதியத்தில் அவருடைய சாப்பாட்டுச் செலவு போகப் பாக்கியைச் சங்கத்திற்குக் கொடுத்துவிட்டார். போலீஸ் அதிகாரிகளால் நாங்கள் எவ்வளவு மட்டில் தெரிவிக்கிறோமோ அவ்வளவு மட்டில்தான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவர்களுடைய உளவாளிகள் எங்களுக்குத் தொண்டர்கள் ஆனார்கள். இந்த விநோத நாடகம் சில மாதங்கள் நடந்தது.

# 2

## ஆயுதப் பயிற்சி

"அன்னிய ஆட்சி ஒழியவேண்டும், நாடு விடுதலை அடையவேண்டும். அதற்கான எவ்வித முறைகளையும் கையாள வேண்டும். படையெழுப்புதல், போர் புரிவதற்குரிய சாதனங்களைச் சேகரித்தல் முதலியன முதலில் தோல்வியுற்றாலும் போர் முறையைக் கைவிடாது குரங்குச் சண்டை புரிதல் (Guerilla warfare), விடுதலையடைந்த நாடுகளின் வரலாறுகளை ஆராய்தல் இவைகளையெல்லாம் பற்றி ஓயாது பேசி வருகிறோமே. இதனால் விடுதலை அடைந்துவிடுவோமா? சற்றுப் பேச்சை நிறுத்திச் செயலில் இறங்கினால் நலமாக இருக்கும். தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று ஒரு நாள் நான் 'இந்தியர் விடுதி'யில் இருக்கும்பொழுது ஐயர் அவர்களைக் கேட்டேன். அதற்கு ஐயர், "ஆம். நீ சொல்வது உண்மைதான். போர் புரியும் முறை, ஆயுதப் பயிற்சி முதலியவை நம் நாட்டினருக்குப் புதிய வேலைகள் அல்ல. எனினும் தேசபக்தி, சமூகக் கட்டுப்பாடு முதலான உயிர்த் தத்துவங்களின் ஊற்று சில ஆண்டுகளாக வறண்டுபோய் விட்டது. அதன் காரணமாக ஆயுதம் தாங்கிச் சேவை புரியும் நம் மக்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் கூலிக்கும் அன்னியர்களுக்கு ஊழியம் செய்து, நமது நாட்டைக் காட்டிக்கொடுத்து விட்டனர். அவர்களுக்கு வீரம் உண்டு. துணிச்சல் அதிகம். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். ஆனால் தேசபக்தி இல்லை. 'இந்த நாடு நமது. இதை ஆக்கலும் அழித்தலும் நமது பொறுப்பு. சீரிய முறையில் போர் புரிந்து, நாட்டைக் கைப்பற்றி, அதற்கான தியாகங்



களைச் செய்து, நமது பெருமையை நிலைநாட்டக் கங்கணங் கட்டிக்கொண்டுள்ள வீரர்களை நாம் தயாரிக்கவேண்டும்' என்பதுதான் என் எண்ணம். அதற்காக முதல் முதலாக நாம் ஒவ்வொருவரும் சுதந்திர நாடாகிய இங்கிலாந்தில் இருக்கும்பொழுதே ஆயுதப் பயிற்சி பெறவேண்டும். இந்நாட்டு மக்களுக்கு ஆயுதங்கள் செய்யவும், ஆயுதம் தாங்கவும், பல இடங்களில் துப்பாக்கி சுடும் பயிற்சி பெறவும் எவ்வளவோ சாதனங்கள் இருக்கின்றன. அவைகளில் ஏதாகிலும் ஒன்றில் நாமும் சேர்ந்து பழகவேண்டும். ஆனால் அதில் ஒரு சங்கடம் கறுப்பர்களாகிய நம்மை அங்கே சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். நானும் ஸாவர்க்கரும் நமது விடுதிக்குச் சமீபத்திலுள்ள பயிற்சிச் சாலையில் (Shoting range) அங்கத்தினராகச் சேர விண்ணப்பம் செய்துகொண்டோம். அநுமதி மறுக்கப்பட்டது. அதன் பிறகு, இவ்வூரில் கடைத் தெருக்களிலுள்ள 'குறிவைத்துச் சுடும்' பந்தயக் கூடங்களில் சென்று அதிகச் செலவில் சுடப் பழகிக்கொண்டோம். நமது அடிமைத்தனத்தை வற்புறுத்த இத்தகைய சம்பவங்களை நாம் தினந்தோறும் அநுபவிக்க வேண்டியிருக்கிறது. இதன் இடையில்தான் நாம் விடுதலையைத் தேடவேண்டும்" என்று பதிலளித்தார்."

"உங்களுக்கு அநுமதி கிடைக்காத பயிற்சிச் சாலைக்கு நான் நாளைக்குப் போய் விசாரித்துப் பார்க்கிறேன். ஒரு சமயம் நான் புகுந்துகொள்ள முடியுமா என்று தெரிந்துகொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மறுநாள் நான் அங்கே சென்று அங்கத்தினனாகச் சேர்வதற்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி, அப்பொழுதே ஒரு மணிநேரம் சுடும் பழக்கத்தையும் ஆரம்பித்தேன். அன்றிரவு சாப்பாட்டுச் சமயத்தில் மற்றவர்களுக்குக் கிடைக்காத வெற்றி எனக்குக் கிடைத்துவிட்டது என்று பெருமை

அடித்துக்கொண்டேன். "உன் அதிருஷ்டம்!" என்றார் ஐயர். "உனக்கு எவ்வளவு நாளைக்கு இந்த அதிருஷ்டம் நீடிக்கும் என்று பார்க்கலாம்!" என்றார் ஸாவர்க்கர்.

இரண்டு நாட்கள் கடந்தன. மூன்றாம் நாள், எனக்கு ஒரு மணியார்டர் மூலம் நான் அங்கத்தினனாகச் செலுத்திய தொகையில் ஒரு நாள் சுடப் பழகியதற்கு உண்டான ரவைகளின் கிரயத்தைத் தள்ளிப் பாக்கியும், என்னை அங்கத்தினனாகச் சேர்க்க முடியாதென்ற கடிதமும் கிடைத்தன. எனக்கு உண்டான கோபத்துக்கு அளவில்லை. என் அதிருஷ்டத்தைக் கண்டு பொறாமைப்படக் கூடியவர்களுடைய அநுதாபத்துக்கு ஆளானேன்.

ஆனால் என் முயற்சியை நிறுத்தவில்லை. லண்டனிலுள்ள ஏழை மக்களுக்குப் பல கைத்தொழில்களில் பயிற்சியளிப்பதற்காக நகர முனிசிபாலிடியாரால் ஒரு பல்கலைக் கழகம் (Polytechnic) நடத்தப்பட்டு வந்தது. அதில் கற்றுக்கொடுக்காத தொழில் உலகத்தில் இராது என்றே எனக்குத் தோன்றுகிறது. சமையல் வேலை, சலவை வேலை, க்ஷவரத்தொழில், புகைப் படம் பிடித்தல் — இவை போன்ற எண்ணற்ற தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. படிப்பிற்குச் சம்பளமோ மிகவும் சொற்பம். போட்டோ பிடிக்கும் வேலை கற்றுக்கொள்ள நான் சேர்ந்தேன். ஆறு மாதத்திற்கு இரண்டரை ஷில்லிங் சம்பளம். மாதத்திற்கு இருமுறை இந்த வகுப்பு நடைபெறும். ஓய்வு நேரமாகிற சாயங்கால வேளைகளில் ஐந்து மணிமுதல் ஆறுமணி வரையில் நடக்கும். உபாத்தியாயரும் போட்டோ பிடிக்கும் தொழிலாளி. இவ்வளவு சுலபமாக மக்கள் பயில இடங்கள் அமைந்திருப்பது சுதந்திர நாடுகளின் ஓர் அம்சம். இந்தக் கழகத்திலும் துப்பாக்கி சுடும் பயிற்சிச் சாலை ஒன்று உண்டு. நான் அந்தக்



கழகத்தில் படிக்கும் மாணாக்கன் ஆனபடியால் துப்பாக்கி சுடும் பயிற்சிச் சாலையில் சேர உரிமை பெற்றேன். போட்டோ பிடிப்பதைக் காட்டிலும் துப்பாக்கிப் பயிற்சியையே நன்கு கற்றேன்.

எனினும் எங்களுடைய முயற்சி இதோடு நின்றுவிடவில்லை. எவ்வளவுதான் துப்பாக்கி சுடும் குறிப் பயிற்சி எங்களுக்கு இருந்தபோதிலும் ஒருவருக்காகிலும், படை அணி வகுப்பு, யுத்தமுறை, யுத்த சாத்திரத்தின் அறிவு முதலியவை இல்லை. இவையொன்றும் தெரியாமல் சுதந்திரப் போரை எப்படி நடத்துவது? மகா பாரதத்தில் விராட பர்வத்தில் ஆநிரை மீட்சிப் படலத்தில் உத்தரகுமாரனுக்கு ஏற்பட்ட விபத்தைப் போலவே எங்களுடைய மனோரதம் முடியும் எனத் தோற்றியது.

சுதந்திர யுத்தப் படைக்குத் தளகர்த்தர்கள் வேண்டும். அவர்கள் யுத்த அநுபவம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். இதற்கென்றே ஐயர் மூவரைத் தேர்ந்தெடுத்தார். இதில் எங்கள் விடுதியில் இருந்த திருமலாச்சாரியார் ஒருவர். மற்றொருவர் அக்காலத்தில் அலிப்பூர் சதியாலோசனைக் கூட்டத்தார் என்று குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்ட உல்லாசகர தத்தருடைய தம்பி. அவரை நாங்கள் 'சோட்டா தத்தர்' என்று அழைப்பது வழக்கம். மூன்றாமவர் ஒரு முஸ்லிம். அவருடைய பெயர் எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. 1909–10–ஆம் வருஷங்களில் மொராக்கோவிலுள்ள மூர் ஜாதியாருக்கும் ஸ்பெயின் தேசத்தாருக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. இரு திறத்தாரில் ஒருவர் படையில் இவர்கள் சேர்ந்து பயிலவேண்டும் என்று முடிவு செய்து, ஒவ்வொருவருக்கும் துப்பாக்கி உடை முதலியன தயாரித்து, அவற்றிற்குத் தேவையான பணத்தையும் யாசித்துக் கொடுத்து அவர்களை அனுப்பினோம். சுமார் ஆறுமாத காலம் வரையில் அவர்களைப் பற்றிய தகவல் ஒன்றும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் திரும்பும்

காலையில் இன்ன இன்ன வேலைகளில் ஈடுபட வேண்டும் என்ற திட்டத்தை ஐயர் தயாரித்தார்.

ஏழு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் சாயங்காலம் நாங்கள் அனுப்பிய தளகர்த்தர்களில் இருவர் திரும்பினார்கள். ஒடுங்கி வற்றிய உடல், தளர்ந்த நடை, வாடிய முகம் இவற்றோடு துப்பாக்கியைச் சுமக்கக் கூடச் சக்தியற்றவர்களாக வந்து பயனற்ற தம் படை முயற்சியைப் பற்றித் தெரிவித்தார்கள். அவர்கள் சேவையை மூர் ஜாதியாரும் விரும்பவில்லை. ஸ்பெயின் நாட்டினரும் விரும்பவில்லை. ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் எதிரிகளின் உளவாளிகளாக இருக்கலாம் என்று சந்தேகித்ததனால் சாதாரணச் சிப்பாய்களாகக்கூட அவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும் ஆங்கில அதிகாரிகளின் சிபார்சோ ஆதரவோ ஒன்றும் அவர்களுக்கு இல்லை. இம்முயற்சியில் சுமார் முந்நூறு பவுன் செலவு செய்தும் பயனில்லாமல் போயிற்று.

லண்டனை விட்டு நீங்கிப் பாரிஸ் நகரத்தில் அடைக்கலம் புகுந்திருந்த காலத்திலுங்கூட ஐயர் தமது ஊக்கம் குன்றாது வேலை செய்துவந்தார். இந்தியாவுக்கு எவ்விதத்திலும் துப்பாக்கி, கைத் துப்பாக்கி ரவைகள் இவைகளை ஏராளமாக அனுப்ப முயன்று வந்தார். இங்கிலாந்தில் இந்த ஆயுதங்களை வாங்குவதிலும், வைத்துக்கொள்வதிலும் உபயோகித்துப் பழகிக்கொள்வதிலும் அதிகக் கஷ்டம் எதுவும் இல்லை. சமீபத்தில் இருக்கும் ஏதாவது தபாலாபீஸில் ஏழரை ஷில்லிங்கு பணம் கட்டி ரசீது பெற்றுத் துப்பாக்கிகள் விற்கும் கடைகளில் பேரைப் பதிவு செய்துவிட்டு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். பாரிஸில் இந்த நிபந்தனை கூட இல்லை. யார் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். ஐயர் தம் நண்பர்களை யாசித்துப் பணம் திரட்டிக் கைத் துப்பாக்கிகள் வாங்கிவந்தார். இவைகளை இந்தியா



திரும்புபவர்களிடம் ரகசியமாக ஒளித்துப் பம்பாய்க்கு அனுப்புவது வழக்கம்.

ராமராவ் ரங்கூன் முனிசிபாலிடியில் 1907-8-ஆம் வருஷங்களில் சுகாதார இன்ஸ்பெக்டர் வேலை பார்த்து வந்தார். உயர்தர உத்தியோகப் பதவி கிட்டும் என்று மேல் படிப்புக்காக லண்டன் வந்து சேர்ந்தார். எனக்கு ரங்கூனில் அவரை நன்கு தெரியும். ஆதலால் அவரை ஐயருக்கு அறிமுகம் செய்வித்தேன். அப்பொழுது முதல் ஐயரும் ராமராவும் நெருங்கிப் பழகி வந்தார்கள். தேசிய ஞானமே இல்லாதிருந்த ராமராவ், ஐயரின் சிநேகத்தினால் தேசபக்தியுள்ளவராக மாறினார். அவர் படிப்பு ஒரு வருஷம் முடிந்தவுடன் இந்தியாவுக்குத் திரும்பவேண்டிய காலம் நெருங்கியது. ஆனால் அந்தச் சமயம் ஐயர் லண்டனை விட்டு வெளியேறிப் பாரிஸில் வசித்து வந்தார். இந்தியா போகுமுன்னர் தம் நண்பரிடம் விடை பெற்றுக் கொள்வதற்காக ராமராவ் பாரிஸில் சில நாட்கள் தங்கிப் பிறகு மார்ஸெயில்ஸ் துறைமுகத்தில் இந்தியாவுக்குக் கப்பல் ஏறினார். ஐயர் அவரிடம் சில கைத் துப்பாக்கிகளைக் கொடுத்துப் பம்பாயில் தம் நண்பரிடம் கொடுக்கும்படி சொல்லியிருந்தார். ராமராவின் பெட்டியின் அடிப்பாகத்தில் போலி அறை ஒன்று தயாரித்து அதன் அடியில் துப்பாக்கிகளைப் பரப்பி மூடிச் சுங்கப் பரிசோதனைக்கு அகப்படாமல் ஏற்பாடு செய்து அவரிடம் கொடுக்கப்பட்டது. இந்த வேலைகளைப் பாரிஸ் நகரத்தில் உளவுவேலை செய்துவரும் ஆங்கிலப் போலீசார் கண்காணித்து வருவதை ஐயரும் ராமராவும் அறிந்து கொள்ளவில்லை. கப்பல் பம்பாய்த் துறை முகத்துக்கு வந்ததும் ஆங்கில உளவுகாரரால் முன்பே விஷயத்தை அறிந்து கொண்ட இந்திய அதிகாரிகள் ராமராவின் பெட்டியைப் பரிசோதித்துத் துப்பாக்கிகளைக் கைப்பற்றி அவரையும் கைது செய்து விட்டார்கள். கேஸ் விசாரணை நடந்து ராம

ராவுக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

பாவம்! ராமராவ் சிறைவாசத்தை அநுபவிக்கச் சக்தி வாய்ந்தவர் அல்லர். உத்தியோகத்தில் பெரிய பதவியைப் பெறப் பரீக்ஷை கொடுத்து ஆர்வத்துடன் திரும்பியவருக்குத் தம் நாட்டின் எல்லையில் காலடி வைத்தவுடனே கடுங்காவல் சிறைவாசம் கிடைத்தது. இது அவருக்கு அளவற்ற ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணியது. எப்படியாகிலும் இந்தக் கொடுந் தண்டனையினின்றும் தப்பித்துக் கொள்ள வழி தேடுவதில் மனம் சென்றது. தேச பக்தியினாலாவது அதற்காக வேண்டிய தியாகத்தினாலாவது சிறைவாசம் ஏற்பட்டிருந்தால் ஒரு சமயம் தாங்கியிருக்கக்கூடும். தம் நண்பர் ஐயருக்காக வேண்டிய ஒரு வேலை செய்ய, அதனால் ஏற்பட்ட கஷ்டத்தைத் தாங்க முடியாமல் தம் துக்கத்தைச் சிறையதிகாரிகளுக்கு அடிக்கடி தெரிவித்து வந்தார்.

அந்தச் சமயம் ஸாவர்க்கரை லண்டனிலிருந்து இந்தியாவுக்குக் கொணர்ந்து நாஸிக் கொலை வழக்குச் சம்பந்தமாக விசாரணை நடத்தி வந்தார்கள். அந்த வழக்கில் ஜாக்ஸன் துரையைக் கொலை செய்ததற்கு ஸாவர்க்கர் இங்கிலாந்திலிருந்து துப்பாக்கிகள் அனுப்பியதாகக் குற்றச்சாட்டு. இதை நிரூபிப்பதற்குச் சாட்சி தேவையாக இருந்தது. சிறையிலிருந்து எவ்விதத்திலும் தம்மை விடுவித்துக்கொள்ளத் தவங் கிடந்த ராமராவ் இதற்கு உபயோகப்பட்டார். ஸாவர்க்கரே துப்பாக்கிகளை வாங்கித் தம்மிடம் கொடுத்ததாகச் சாட்சியம் சொல்ல உடன்பட்டார். ஸாவர்க்கரை ராமராவ் பார்த்ததே இல்லை. இருந்த போதிலும் சாட்சி கூறினால் சிறை வாசம் நீங்கும் என்ற எண்ணத்தின் பேரில் அதிகாரிகளாலும் தூண்டப்பட்டு அபாண்டமான சாட்சியம் சொன்னார். முடிவில் ஸாவர்க்கர் தீவாந்தர தண்டனை பெற்று அந்தமான் தீவுக்குக் கொண்டு போகப் பட்டார்.



ராமராவ் இந்தத் துரோகத்தின் பயனாகச் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டார். பிறகு உளவுப் போலீஸ் இலாக்காவில் உத்தியோகமும் பெற்றார். ஆனால் இவ்வளவு புரட்டுகளைச் சொல்லி விடுதலையும் பதவியும் பெற்ற ராமராவ் அவற்றை அநுபவிக்க நெடு நாட்கள் வாழவில்லை. 1918-இல் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

1913–ஆம் வருஷத்தில் அவர் என்னை ரங்கூனில் சந்தித்துத் தாம் விடுதலையடைந்த விவரங்களையும் கூறிப் போலீஸ் இலாக்காவில் வேலை பார்த்து வருவதையும் தெரிவித்தார். பிறகு 1917-ஆம் வருஷம் லக்ஷ்மணபுரி அகில இந்தியக் காங்கிரஸ் கூடிய பொழுது அங்கே அவரைச் சந்தித்தேன். அவர் உத்தியோக முறையில் அங்கு வந்திருந்ததையும் அறிந்தேன். அவர் செய்துவரும் ஈனத் தொழிலினால் எனக்கு உண்டான வெறுப்பையும் என் நண்பர்கள் இருவருடைய முன்னிலையில் அவருக்குத் தெரிவித்தேன். எனினும் அவரை நொந்து என்ன பயன்? சாமர்த்தியம் அற்ற சாமானிய மனிதன்! அடாது செய்து வாழ்வு நடத்துபவர்களுடைய தொகை அடிமைப்பட்ட இந்நாட்டில் எண்ணற்றது. அதில் அவரும் ஒருவர். கேவலத் தொழிலில் ஈடுபட்டும் இறைவன் அவருக்கு ஆயுள் அதிகம் கொடுக்கவில்லை. இளமையிலேயே காலமாகி விட்டார்.

## 3

## மகாத்மா ஆவதற்கு முன்

"மனித சிருஷ்டியில் உயர்ந்தவரும் ஒப்பற்றவருமான ஒருவரை இன்று சந்தித்தேன்" என்று அளவற்ற மகிழ்ச்சியுடன் படுக்கையில் படுத்தவண்ணமே சொன்னார் காலஞ்சென்ற தேச பக்த சிரோமணி வ. வே. ஸு. ஐயர். லண்டனில் இந்தியா விடுதியில் (India House) 1908-ஆம் வருஷம் ஒரு நாள் இரவு நாங்கள் இருவரும் பேசும் பொழுது அவர் சொல்லிய சொற்கள் இப்பொழுதுதான் நேரில் என்னுடன் சொல்லுவது போல் இருக்கின்றன. அக்காலத்தில் ஸ்ரீமான் காந்தி தென் ஆப்பிரிக்காவில் ஒரு பாரிஸ்டர். இந்தியர்களின் சகிக்க முடியாத தொல்லைகளைப் பார்லிமென்ட்டு சபையாருக்கு எடுத்துரைப்பதற்காக வந்த தூதர். அன்றைத் தினம் பகலில் அவரைக் காணவேண்டிப் புறப்பட்டுச் சென்ற ஐயர் இரவுதான் வீடு வந்து சேர்ந்தார்.

"சௌந்திரம், அவர் சாமான்ய மனிதர் அன்று. அவருடன் பேசப் பேச என் மனம் அவரிடமே ஈடுபட்டு விட்டது. என்ன அன்பு, என்ன மரியாதை, என்ன தேசபக்தி, என்ன உண்மை! சொல்லி முடியாது போ" என்றார் ஐயர்.

"ஸ்ரீமான் காந்தியை எங்கே கண்டீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"பல இடங்களில் அவரை விசாரித்துத் தேடினேன். இந்தியாவிலிருந்து வந்திருக்கும் தலைவர்கள் இறங்கியிருக்கும் பெரிய ஹோட்டல்களில் எல்லாம் அலைந்து திரிந்து, இரண்டு மணி நேரத்திற்கு அப்பால் வண்டி புக முடியாத ஒரு



சிறிய சந்தில், இந்தியாவிலிருந்து வந்து சிற்றுண்டிச் சாலை ஒன்றை நடத்திவரும் ஒருவர் வீட்டில் கடைசியாகக் கண்டேன். இரண்டு மூன்று பழைய நாற்காலிகள், ஒரு கிழிந்த ஜமக்காளம், அதன்மேல் ஒரு படுக்கை. இவைகள் அடங்கிய ஒரு சிறிய அறையில் சதா புன்னகை புரியும் முகத்துடன் ஆங்கில உடுப்புடன் ஸ்ரீமான் காந்தியைக் கண்டேன். அவருடன் பேசிய பிறகு மறுபடியும் அவரைக்கண்டு பேசவேண்டும் என்கிற ஆசை அதிகம் ஆகிவிட்டது. நாளைத்தினம் விநாயக ஸாவர்க்கரை அவரிடம் அழைத்துக் கொண்டுபோய் இருவருமாக அவருடன் பேசப் போகிறோம்" என்று சொல்லிவிட்டு அயர்ந்து தூங்கி விட்டார்.

பிறகு மூன்று நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து ஐயரும் ஸாவர்க்கரும் காந்தியைக் கண்டு பேசினார்கள். இவ்விருவரும் கேட்ட கேள்விகளும் இவர்களுக்கு விடையளித்த காந்திஜியின் தத்துவமுமே "ஹிந்து ஸ்வராஜ்" என்ற புத்தகத்திற்கு ஆதாரம். காந்திஜி அசைக்க முடியாத வேரூன்றின அஹிம்ஸாவாதி. 'சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்த சக்தி உலகில் வேறு இல்லை. அஹிம்ஸையும், சத்தியமும், தெய்வமும் ஒன்றே. எனவே தெய்வ சக்தியை எதிர்க்கக் கூடிய சக்தி உலகில் வேறில்லை'. இதுதான் காந்திஜியின் முடிவான நம்பிக்கை. அதை எள்ளளவேனும் அசைக்க இவ்விருவராலும் முடியவில்லை. தாங்கள் படித்திருந்த சரித்திர ஞானம், மனித இயல்பு, சமூக நடவடிக்கைகள் இவை எல்லாவற்றிற்கும் அஹிம்ஸா முறையில் தகுந்த பதில் அளித்தபடியால், அவரைப் புரட்சி, சதியாலோசனை, யுத்தம் முதலிய விஷயங்களில் ஈடுபடுத்தி விடலாம் என்று கட்சியாடின ஐயருக்கு ஒரு விதமான ஏமாற்றமே உண்டாயிற்று.

"நான்கு நாட்கள் மன்றாடியும் பயன் இல்லை. அவருக்கு அஹிம்ஸையில் பிடிவாதமான மூட நம்பிக்கை. இருந்த போதிலும் நம் நாடு விடுதலை

அடையவேண்டும், நமது அடிமைத்தனம் ஒழிய
வேண்டும், நமது கோழைத்தனம் நீங்கவேண்டும்.
என்ற இத்தகைய எண்ணங்களில் சந்தேகமற்ற
முடிவு உள்ளவர். அவர் இந்த அஹிம்சையில்
அரசியில் துறையில் வெற்றி பெற்றுவிடலாம் என்று
சாதிப்பது மாத்திரந்தான் பொருத்தம் இல்லாமல்
இருக்கிறது." இதுதான் ஐயருடைய முடிவான அபிப்
பிராயம். எனினும் காந்தியிடத்தில் அளவற்ற அன்பும்
பக்தியும் ஏற்பட்டன. அவருடன் பேசுவதில்
உத்ஸாகம், அவருடைய எளிய வாழ்க்கையில்
ஆச்சரியம், அவர் உண்மையான பேச்சில் ஒரு சக்தி
இவைகளைப்பற்றி ஓயாது புகழ்வார்.

அக்காலத்தில் இங்கிலாந்திலும் லண்டன்
நகரிலும் மொத்தம் எழுநூறு இந்தியர்களுக்கு
மேலாக இருந்தார்கள். அவர்களில் பெரும்பான்மை
யோர் மாணுக்கர்கள்; செல்வர்களான பெற்ருேர்
களின் மக்கள். படிப்பைத் தவிர, அந்த நாட்டா
ருடைய இனிய வாழ்க்கையில் ஈடுபட்டுக் காலத்தைக்
கழிப்பதைத் தவிர, நம் நாட்டைப் பற்றியாவது,
சமூக தேசிய நிகழ்ச்சிகளைப் பற்றியாவது அநேக
ருக்குக் கவலை எப்பதே இல்லை. ஏதாகிலும் ஒரு
காரணத்தை ஒட்டியாகிலும் அவர்கள் எல்லோ
ரையும் ஒன்ருகத் திரட்டி, "நாம் இந்தியர்கள்"
என்கிற நினைவை அவர்களுக்கு உண்டுபண்ண
வேண்டும் என்கிற எண்ணத்தை ஐயர் தம் மனத்தில்
கொண்டு, எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஒரு
பண்டிகையைக் காரணமாக வைத்து ஒரு கூட்டம்
நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார். ஒரு
மாதத்தில் தீபாவளி வர இருந்ததால் லண்டனில்
தீபாவளி கொண்டாட வேண்டும் என்று நிச்ச
யித்தோம். லண்டன் தீபாவளிக்கு மங்கள ஸ்நானம்
செய்யமுடியாது. கோடியுடுப்பது சாத்தியமில்லை.
ஆகையால் ஒரு விருந்துச் சாப்பாடும் அதன் பிறகு
சொற்பொழிவும் நிகழ்த்த முடிவு செய்யப்பட்டது.



விருந்தில் சேருபவருக்குக் கட்டணம் உண்டு.
அவ்விதம் சேருவதற்குச் சம்மதித்தவர்கள் நூற்று
இருபது பெயர்கள். இதற்குத் தகுந்த தலைவர்
வேண்டுமே. அந்தப் பதவிக்கு ஓர் இந்தியரைத்
தேர்ந்தெடுப்பதற்காகத் தினந்தோறும் இந்தியத்
தலைவர்கள் வந்து இறங்கியிருக்கும் பெரிய இடங்
களிலும் தனி விடுதிகளிலும் சென்று அவர்களில்
ஒருவரைத் தலைமை வகிக்கவேண்டினேம். அங்கிருந்த
இந்தியத் தலைவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயர்
களுடைய நன்மதிப்பைப் பெற்று நம் நாட்டுக்கு
அரசியல் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற
விருப்பத்துடன், அவர்களிடம் விண்ணப்பம் செய்து
கொள்ள வந்திருப்பவர்கள். அநேகமாக எல்லோரும்
சாக்குப் போக்குச் சொல்லி வர மறுத்து விட்டார்கள்.
இந்தப் பெரியோர்களில், காலஞ்சென்ற கோக்கலே,
விபின் சந்திரபால், லாலா லஜபத்ராய், இன்னும்
மற்றவர்களும் சேர்ந்தவர்கள். ஐயர் இந்தியர் விடுதி
யைச் சேர்ந்தவர், புரட்சிக்காரர் என்று பெயர் வாங்கி
யவர். அவருடன் கலந்தால் தங்கள் எண்ணம் ஒரு
சமயம் கைகூடாமல் போய்விடுமோ என்கிற பயமே
இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். ஒரு தலைவர்
கூட நமது தீபாவளி விழாவுக்கு இந்நகரிலே கிடைக்க
வில்லையே என்று ஐயர் துயரமுற்றுக் கடைசியாகக்
காந்தியைக் கேட்கலாம் என்று முடிவு செய்தார்.
அப்படியே அவரிடம் சென்று கேட்டதில் சில
நிபந்தனைகளுடன் அவர் தலைமை வகிக்க ஒப்புக்
கொண்டார். அன்றிரவு மனக்கவலை யொழிந்து
ஐயர் தாம் காந்தியிடம் சென்றதையும் அவர் பதில்
அளித்த விவரத்தையும் சொன்னர்.

"கூட்டம் எதற்காக?" என்று காந்தி கேட்ட
வுடன் ஐயர், "இந்தத் தேசத்தில் சுமார் எழுநூறு பேர்
களுக்கு மேல் நம் நாட்டினர் பல வேலைகளை முன்
னிட்டு வந்திருக்கிருர்கள். அதில் பெரும்பாலோர்
செல்வர்களான மாணுக்கர்கள். அவர்கள் எல்

லோரையும் ஒருமுறையாகிலும் பொது விஷயத்தில் ஈடுபடும்படி செய்யவேண்டியது அவசியம். கொஞ்சம் தேசபக்தி புகட்டவும், நம் நாட்டினர் என்ற உணர்ச்சி உண்டாக்கவும் செய்யவேண்டும். அதற்காகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாட வேண்டும். தாங்கள் அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கவேண்டும்" என்று பதில் சொன்னார்.

காந்தி புன்சிரிப்புடன், "அப்படியா! மிகவும் நல்ல யோசனை. நான் வருகிறேன். ஆனால் யாவரும் ஒன்றுகூடி ஒரு ஹோட்டலில் பணம் கொடுத்து ஆங்கில முறையில் உண்டு, கூட்டம் நடத்துவதாக இருந்தால் அதில் எனக்குப் பிரியமில்லை. நாம் இந்தியர்கள் என்பதற்கு நாம் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு தத்துவம் கொண்டதாக இந்தக் கூட்டம் இருக்கவேண்டும். ஆகையால் அன்று நடக்கும் விருந்து இந்திய உணவாகவும் மாமிசம் இல்லாத அஹிம்ஸா விருந்தாகவும் இருக்கவேண்டும். இதற்கு நீங்கள் உடன்பட்டால் நான் வருகிறேன்" என்று கூறினார்.

ஐயர், "இது மிகவும் கடினமான நிபந்தனை. இருந்தபோதிலும் தாங்கள் வருவதை எண்ணி எப்பாடு பட்டாகிலும் தகுந்த ஏற்பாடு செய்துவிடுகிறோம்" என்றார்.

அடுத்த சனிக்கிழமை இரவு ஏழரை மணிக்கு உணவும் பிறகு சொற்பொழிவும் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நடத்துவது எனவும் அந்நேரத்திற்குத் தலைவர் வந்தால் போதும் எனவும் காந்திக்கு ஐயர் தெரிவித்துவிட்டார்.

இதற்கென்று ஒரு பெரிய இடம் வாடகைக்கு ஏற்பாடு செய்தோம். இந்தியச் சமையல் செய்வதற்காக நாங்கள் ஆறு பேர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். மிகவும் கஷ்டப்பட்டுச் சமையலுக்கு வேண்டியவைகளைக் கடை கடையாகத் தேடித் திரிந்து சேகரித்தோம். விழாவிற்கு முந்திய தினம்

251 77M81 N46 17



தலைவர் காந்திக்கு ஞாபகமூட்டுவதற்காக ஐயர் அவரிடம் சென்றார். சாப்பாடு நடக்கும் இடம், நேரம், செய்திருக்கும் ஏற்பாட்டின் விவரம் எல்லாவற்றையும் கவலையுடன் கேட்ட தலைவருக்குத் தெரிவித்துவிட்டு ஐயர் திரும்பினார்.

அன்றைத்தினம் பகல் ஒரு மணிக்கே சமையல் செய்ய ஆரம்பித்துவிட்டோம். வேலை தெரிந்தவர்களும் தெரியாவிட்டாலும் ஊக்கம் உடையவர்களான ஆறு பேர்கள் அடங்கிய ஒரு கோஷ்டி சமையல் வேலையைத் தொடங்கியது. நானும் என் நண்பர் ஒருவரும் சமையலைச் செய்ய, மற்றவர்கள் உதவி செய்தார்கள். பழக்கம் இல்லாததனால் வேலை சற்றுத் தாமதமாகவே நடந்தது. அன்று வரையில் ஐயரிடமிருந்து கேட்டதைத் தவிர நான் நேரில் காந்தியைப் பார்த்ததில்லை. நாங்கள் வேலை செய்யத் தொடங்கி அரைமணி நேரத்திற்கெல்லாம் நடு வயசுள்ளவரும் பலம் அற்றவர்போலத் தோன்றியவருமான ஒருவர் எங்களுடன் வந்து கலந்து கொண்டார். வேலையில் அவர் காட்டிய ஊக்கமும் ஆர்வமும் மற்றவர்களில் ஒருவருக்குக்கூட இல்லை. அவரைப் பலவித முரட்டு வேலைகளில் விட்டோம். தட்டு, தொட்டி, பாத்திரம் இவற்றைக் கழுவுவது, கறிகாய் நறுக்குவது, தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பது முதலிய எல்லா வேலைகளையும் சொல்லுவதற்கு முன்பாகவே அறிந்துகொண்டு அவர் செய்தார். இந்தியாவிலிருந்து வந்திருக்கும் ஒரு புதிய ஏழை ஆசாமி என்று அவரை நாங்கள் நினைத்து நன்றாக வேர்க்க வேர்க்க வேலை வாங்கினோம்.

சுமார் ஆறு மணி இருக்கும். ஐயர் ச[illegible] அறைக்கு வந்தார். "எல்லாம் முடிந்துவிட்ட[illegible]" என[illegible] கேட்டுக்கொண்டே என்னைப் பார்த்துக் கவ[illegible] யுட[illegible] "இங்கு வந்திருக்கும் இவரை யா[illegible] [illegible] சொன்னது? இவர் தாம் இன்று கூட்டத் [illegible] தலைவர் ஸ்ரீமான் காந்தி. இவரை நீங்கள் [illegible]

105134

நடத்தும் முறை மிகவும் அழகாக இருக்கிறது" என்று சற்றுத் துக்கத்துடன் சொன்னார்.

உடனே நாங்களும் ஐயருடன் சேர்ந்து மன்னிப்புக் கேட்டோம். காந்தி குலுங்க நகைத்து, "நான் யாரை எதற்காக மன்னிப்பது என்று தெரியவில்லை. இந்த வேலையில் முதல் குற்றவாளி நான். இந்த ஊரில் இந்த மாதிரி ஒரு விருந்து நடத்துவது எவ்வளவு கடினம் என்பது எனக்குத் தெரியும். எனினும் உங்களைப் போன்ற இளைஞர்கள் இந்த வேலை செய்ய முன் வந்தது எனக்கு எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கிறது! அதற்காக நான் அல்லவோ உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்?" என்றார்.

அதுதான் முதல் தடவை காந்தியை நான் நேரில் சந்தித்தது. எவ்வளவு தடுத்தும் தாம் செய்துகொண்டிருந்த வேலையை அவர் நிறுத்தவில்லை. எல்லோருக்கும் மேஜைகளில் தட்டில் உணவு எல்லாவற்றையும் பரிமாறியபின் கடைசியாகத் தாமும் தமது இடத்தில் அமர்ந்தார்.

சாப்பிட்ட பிறகு சொற்பொழிவு நடந்தது. முதலில் தலைவர் காந்தி பேசினார். தமக்கும் விநாயக ஸாவர்க்கருக்கும் தேசீய விடுதலை முறையில் மாறுதலான அபிப்பிராயம் இருந்தபோதிலும் இம்மாதிரியான சம்பவங்களில் இந்தியர்கள் எல்லோரும் சேர்ந்து தாம் ஒரு நாட்டினர் என்ற உணர்ச்சியை வளர்க்கவேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொல்லி, தாம் கேட்டுக் கொண்டபடி விருந்தை நிறைவேற்றியதற்கு வந்தனம் அளித்து, கடைசியாக அஹிம்சையின் மேன்மையையும், அது இந்திய சமூகத்தினருக்கு அழியாத செல்வம் என்பதையும் கூறி முடித்தார். அக்காலத்தில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நடத்தக் கூடிய வன்மை அவருக்கில்லை. எனினும் சொல்ல வேண்டியதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சொன்னார்.



அவருக்கு வந்தனம் அளிக்கும் முறையில் ஸாவர்க்கர் ஒரு பிரசங்கம் செய்தார். காந்தியைக் காட்டிலும் பேச்சு வன்மை ஸாவர்க்கருக்கு அதிகம். மேலும் இளைஞர் மனத்தை உத்ஸாகப்படுத்தும் முறையை அவர் நன்கு அறிந்தவர். காந்திக்கும் தமக்கும் உள்ள வேற்றுமையை இன்னதென்று விவரிக்க முடியாதென்றும், நம் நாட்டின் பூர்விக சுதந்திர உணர்ச்சியை மட்டிலும் அன்று ஞாபக மூட்டத் தமக்கு விருப்பமென்றும், அதன் புராதனப் பெருமையையும், வீரத்தையும் அப்பெரியார்களுடைய சந்ததியார்களாகிய நாம் இன்று அடிமைப்பட்டு வாடி வதங்கி இருப்பதை அறிந்து, சுதந்திரமடைய முயலவேண்டும் என்றும் வெகு உருக்கமாகவும் உள்ளக் கிளர்ச்சி உண்டாகும்படியும் பேசினார். கூட்டம் இனிது முடிந்தது. நாங்கள் எல்லோரும் ஸாவர்க்கரின் சொற்பொழிவாற்றும் சக்தியைப் புகழ்ந்து கொண்டாடினோம்.

இம்மாதிரியான இரண்டு மூன்று பிரசங்கங்களைக் காந்தி கேட்பாராகில் அஹிம்சையை விட்டு நம்முடன் சேருவது திண்ணம் என்பதாகவும் உறுதி கொண்டோம்.

இன்று ஸாவர்க்கரும் காந்தியும் உயிரோடு இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணமான வ. வே. ஸு. ஐயர் காலஞ் சென்றுவிட்டார். காந்திஜி அஹிம்சையை விடவே இல்லை. உலகமே கவனிக்கும் முறையில் அதைப் பறைசாற்றி வருகிறார். ஸாவர்க்கரும் தமது பழைய கொள்கைகளை விடவில்லை. ஹிந்து மகாசபைத் தலைவராக விளங்குகிறார்.

## 4

## தாடியின் மகத்துவம்

மனிதனுக்குத் தாடியின் பயன் இன்னது என்பதைத் தெளிவாகச் சொல்லமுடியாது. சிருஷ்டியில் இருபாலர்களிலும் ஆண்களுக்கு மாத்திரம் தாடி இருக்கிறது. காரணம் இல்லாமல் இயற்கையில் இந்த மாறுபாடு இருக்கமுடியாது. மிகப் பழமையான புராண இதிகாசங்களிலும், காட்டில் வசிக்கும் ரிஷிகளும், முனிவர்களும், தபஸ்விகளும் விரிந்த முடியும் படர்ந்த தாடியும் உள்ளவர்களாகவே சொல்லப்பட்டிருக்கின்றனர். எல்லா மதத்தினரிடத்தும் தாடி வளர்ப்பது ஒரு கொள்கையாக இருந்து வருகிறது. முஸ்லீம்களில் இன்னவர்கள் தாடி வளர்க்க வேண்டும் என்கிற வழக்கம் இருந்து வருகிறது. கிறிஸ்தவர்களிலும் தாடி வளர்ப்பது மதிப்புக்குரிய ஒரு பழக்கமாக இருக்கிறது. இந்துக்கள் 'தீக்ஷை' என்று முடியை எடுக்காமல் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு விரதமாக வளர்ப்பதை எல்லோரும் அறிவர்.

இவைகளைத் தவிர நவீன நாகரிக முறையிலும் தாடி வளர்ப்பது உண்டு. சிலர் தங்கள் முக அழகை அதிகப்படுத்துவதற்காகத் தாடியை அன்புடன் நீட்டியோ குறுக்கியோ வைப்பார்கள். குளிர் மிகுதியாக உள்ள நாட்டில் தாடி வளர்ப்பதில் சுகம் உண்டு. கழுத்திலும் முகத்திலும் குளிர் தாக்காமல் உஷ்ணமாக வைத்திருப்பதற்காக இது உபயோகப்படுகிறது. சிலர் முகத்தில் உண்டான விகாரங்களை மறைப்பதற்கும் தாடி அவசியமாக இருக்கிறது. ஆனால் சூரிய வெப்பத்தினால் அவதிப்படும் நாட்டினருக்குத் தாடியால் கஷ்டமும் நோயுமே உண்டாகும். அழுக்கு அடையும், வேர்வை தங்கித் துர்நாற்றம்



எடுக்கும். குடுமியுள்ளவர்கள் அதைப் பேணிப் பார்ப்பதுபோலவே தாடியையும் கவனிக்கவேண்டும். உண்ணும்பொழுது உணவுப் பொருள் ஒட்டிக் கொண்டு சரிவரக் கழுவாவிடில் சிறு கிருமிகளை உண்டு பண்ணும்.

எனினும் தாடி வளர்ப்பது எல்லா நாடுகளிலும் தொன்று தொட்டு வழக்கமாக இருக்கிறது. கவியரசர் ரவீந்திரர் நல்ல நீண்ட தாடியுடையவர். அவர் கவித் திறமையால் தாடி மகிமை பெற்றதோ தாடியினால் கவித்திறன் அதிகரித்ததோ சொல்ல இயலாது. கவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்நாளில் சில காலம் அவர் தாடியோடு விளங்கினார். ஆனால் அவர் சாசுவதமாகத் தாடி தரித்தவர் அல்லர். காலஞ்சென்ற பாபு சுரேந்திர நாத் பானர்ஜியும் நீண்ட தாடியுள்ளவர். அவருடைய சொந்தத் திறமையோடு கூடத் தாடியும் மகிமை பெற்றது. வங்காளிகளில் அநேகர் தாடி வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தாடி வளர்ப்பவர்கள் அநேகர் பரதேசிகள். யாசிப்பதற்குத் தகுந்த சாதகமாக இது உதவும் போல் இருக்கிறது.

காலஞ் சென்ற பெஸண்ட் அம்மையார் ஹோம்ரூல் கிளர்ச்சி நடத்தும்பொழுது வழக்கம் போலத் தேசீயக் கொடியின்பேரில் அதிகாரிகளுக்குக் கோபம் உண்டாயிற்று. தேசீயக்கொடி நாட்டக் கூடாது, உயர்த்தக் கூடாது, பிடிக்கக்கூடாது என்றெல்லாம் உத்தரவு பிறந்தது. அச்சமயம் கும்பகோணத்தில் பிதாமகரைப்போல் விளங்கும் ராமானுஜாச்சாரியார் தாடி வளர்த்து இருந்தார். அதை நாங்களெல்லோரும் "ஹோம் - ரூல் தாடி" என்று சொல்வதுண்டு. ராமானுஜாச்சாரியார் பெஸண்ட் அம்மையாரிடம் பக்தி பூண்டவர். தாம் உத்தியோக பதவியிலிருந்து பெற்ற உபகாரச் சம்பளத்திற்கே மோசம் வந்துவிடுமோ என்கிற பயத்தைக் கூடக் கருதாமல் இயக்கத்தில் ஈடுபட்டு வேலை

செய்தார். ஒருசமயம் ஒரு பொதுக் கூட்டத்தில் சர்க்கார் தடை உத்திரவை எதிர்த்துப் பேசும் பொழுது அருண்டேல் துரை ராமானுஜாச்சாரியாரைப் பார்த்து, "இப்போது தங்கள் தாடியில் ஒரு பாகத்துக்குச் சிவப்பும், மறுபாகத்துக்குப் பச்சையுமாக வர்ணம் கொடுத்து விட்டால், நெற்றியிலிருக்கும் வெண்ணிறமான நாமத்துடன் சேர்ந்து எல்லாம் ஹோம் ரூல் மயமாகி விடும். அதற்கு அதிகாரிகள் என்ன தடை உத்தரவு போடுகிறார்கள் பார்க்கலாம்" என்றார்.

தாடி கோஷ்டியில் வ. வே. ஸு. ஐயரும் சேர்ந்தவர். லண்டனில் இருக்கும் பொழுதே தாடி வளர்க்கத் துவக்கி விட்டார். தாடியும் அவருக்குப் பொருத்தமாக இருந்தது. அவர் உள்ளும் புறமும் சுத்தமான மனிதர். ஒருவிதமான கெட்ட பழக்கமும் அவரிடம் இல்லை. சிற்றின்பங்களை ஒரு காலும் மனத்தினால் கூட நினைக்க மாட்டார். அத்தகைய பழக்கம் உள்ளவர்களைக் கண்டால் வெறுப்பார். வெறுப்பை மறைத்துக் கூட வைக்க மாட்டார். அதனால் அவரிடம் நட்புக்கொண்டவர் மிகக் குறைவு. அவருடைய மனத்தூய்மை நம் ரிஷிகளின் தூய்மையை ஒத்தது. நல்ல தேகக்கட்டு; அதற்குத் தகுந்த மனவுறுதி. இரண்டிற்கும் மேற்பட்ட தேச பக்தி. அவருடைய ஆழ்ந்த தேச பக்திக்குக் குரு விநாயக ஸாவர்க்கரும். மனத்தூய்மைக்கு அவர் பிறப்பும், வளர்ப்பும், கல்வியும், கலைஞானமுமே காரணங்கள். பிடிவாத குணமுள்ளவர். சில சமயங்களில் அவர் பிடிவாதமே அவருக்கு அநேக கஷ்டங்களுக்குக் காரணமாயிற்று. ஆங்கிலம், வடமொழி, லத்தீன், பிரெஞ்சு, இவைகளில் தேர்ந்த பயிற்சியோடு தமிழிலும் நல்ல தேர்ச்சியுள்ளவர். கம்ப ராமாயணத்தில் அநேக ரசமான பாடல்கள் மனப்பாடம். எனக்குக் கம்பனிடத்திலும் தமிழினிடத்திலும் பக்தி இருக்குமேயாகில் அது அவருடைய பழக்கத்தால் உண்டானதே.



'சுதந்திர இந்தியா சங்கம்' என்ற பெயருள்ள ஒரு ஸ்தாபனத்தை நாங்கள் நடத்தி வந்தோம். இதற்கு விநாயக ஸாவர்க்கரும் ஐயரும் உயிர் நாடிகள். பெரும்பாலும் சீமைக்குப் படிக்க வந்த இளைஞர்களே அதன் அங்கத்தினர்கள். தினந்தோறும் தேசத்திற்காக ஒரு தொண்டு செய்யவேண்டும் என்பது ஒவ்வோர் அங்கத்தினருக்கும் நிபந்தனை. தினசரிக் குறிப்பு வைத்துக்கொண்டு அதை அடிக்கடி தணிக்கை செய்வது வழக்கம். இந்தியா, இங்கிலாந்து இத் தேசங்களிலிருக்கும் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள், குறிப்புகள் முதலியன எழுதுவதும் ஒரு சேவை எனக் கருதப்பட்டது. ஐயர் அக்காலத்தில் சென்னையிலும் புதுவையிலும் நடைபெற்று வந்த தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தலையங்கங்களும், இந்தியா பத்திரிகைக்குத் தொடர்கதையாகச் சுமார் ஒரு வருஷகாலம் வரையில் கரிபால்டி சரித்திரமும் எழுதி வந்தார். என் பங்கிற்கு ராணி லக்ஷ்மீபாயின் சரித்திரத்தை எழுதி வந்தேன். விநாயக ஸாவர்க்கர் மகாராஷ்டிரத்தில் 'இந்தியாவின் சுதந்திர யுத்தம்' என்னும் புத்தகம் எழுதி வந்தார். இதன் மகாராஷ்டிரப் பதிப்பும் ஆங்கிலப் பதிப்பும் இந்தியாவிற்குள் வரக்கூடாது என அரசாங்கத்தார் தடுத்துவிட்டார்கள். தேகப் பயிற்சி, குதிரையேற்றம், மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளுதல், குத்துச்சண்டை, துப்பாக்கிப் பிரயோகம் இவைகளில் பயிற்சியும் தேச சேவையின் பகுதிகளாகவே சங்கத்தாரால் கருதப்பட்டன. சங்கத்தின் வேலைகள் ஆங்கில அதிகாரிகளுக்கு எட்டின. எங்கள் விடுதியும் நாங்களும் ரகசியப் போலீஸ்காரர்களின் ஓயாத கவனிப்புக்கு ஆளானோம்.

1909-ஆம் வருஷம் லண்டனில் ஸர் கன்ஸன் வைலி என்பவர் மதன்லால் டிங்ரா என்னும் பஞ்சாபி க்ஷத்திரிய இளைஞரால் சுடப்பட்டு இறந்தார். ஸர் கன்ஸன் வைலி இந்தியாவில் வேலை பார்த்தவர்.

அப்போது இந்தியா மந்திரிக்கு இந்திய அரசியல் விஷயங்களுக்கு அமைச்சராக இருந்தார். இது அரசியல் சம்பந்தமான கொலை. தேச விடுதலைக்காக இளைஞர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று காட்டுவதற்காகத் தாம் சுட்டதாகக் கோர்ட்டில் மதன்லால் டிங்ரா வாக்குமூலம் கொடுத்து அதன் பேரில் குற்றவாளியெனத் தீர்ப்புப் பெற்றுத் தூக்கில் இடப்பட்டார்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அதிகாரிகளின் கவனம் எங்கள் மீது அதிகமாகப் பாய்ந்தது. சங்கத்தையும் எங்கள் விடுதியையும் கலைப்பதற்கான முயற்சிகள் நடந்தன. விநாயக ஸாவர்க்கர் பேரில் சந்தேகம் அதிகப்பட்டதனால் ஓர் இரவு ஒருவருக்கும் தெரியாமல் பிரெஞ்சுத் தலை நகரமாகிய பாரிஸுக்கு அவர் போய்விட்டார். ஐயர் தலைமையில் சங்க வேலைகள் சற்றுத் தலைமறைவாகவே நடந்து வந்தன. இதற்குள்ளாக இந்தியாவில் நாஸிக் நகரத்தில் ஜாக்ஸன் துரை சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்குக் கைத்துப்பாக்கி விநாயக ஸாவர்க்கர் அனுப்பியதாக ஒரு நடவடிக்கை தயாரித்து விசாரணைக்காக அவரை இந்தியாவுக்குக் கொண்டுவர ஒரு வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. இது விஷயம் எங்களுக்குத் தெரியாது. விநாயக ஸாவர்க்கர் பாரிஸ் சென்று மூன்று மாதத்திற்குப் பிறகு இந்திய அரசியல் பிரச்னை சிலவற்றைப் பற்றியும் சங்க நடவடிக்கைகளைப் பற்றியும் கலந்து ஆலோசிப்பது அவசியமாகவே ஐயர் ஸாவர்க்கரை லண்டன் வருமாறு தந்தி அனுப்பினார். அதன் காரணமாக ஸாவர்க்கரும் உடனே புறப்பட்டு வந்தார். ரகசியப் போலீஸார் பாரிஸிலும் ஸாவர்க்கரைப் பின்பற்றி யிருந்தனர் என்பது அவருக்குத் தெரியாது.

அன்று லண்டன் சேர்வதற்காக டோவர் துறைமுகத்தில் ஸாவர்க்கர் இறங்கியவுடனே அவர் கைது செய்யப்பட்டார். இந்தியாவிலிருந்து நாஸிக் கொலை



வழக்குச் சம்பந்தமான தஸ்தாவேஜுகள் வருவதற்கு இரண்டு மாதங்களுக்குமேல் ஆயின. ஐயர் அடிக்கடி சிறையில் சென்று வழக்கு விஷயமாகவும் மற்றும் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும் பேசிவிட்டு வருவது வழக்கம். முடிவில் ஸாவர்க்கரை இந்தியாவிற்கு விசாரணைக்காகக் கடத்திவிட முடிவாகி விட்டது. ஸாவர்க்கரின் கதி இப்படியானவுடன் ஐயரும் தம் பேரில் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருவதை அறிந்து, ஸாவர்க்கரை ஆங்கிலச் சிறையிலிருந்து இந்தியாவிற்கு அழைத்துச் செல்வதற்குச் சில நாட்கள் முன்னதாகவே திடீரென்று ஒருவரிடமும் சொல்லாமல் பாரிஸ் போய்விட்டார்.

அடிக்கடி ஸாவர்க்கரைச் சிறையில் ஐயர் சந்தித்தபொழுது எவ்விதத்திலும் அவரை இந்தியா போய்ச் சேராமல் தப்புவிக்க வழி தேடவேண்டிய முறைகளையும் ரகசியமாகப் பேசிவந்ததன் முடிவாகவே ஐயர் பாரிஸுக்குப் போய்விட்டார் என்பது பிறகுதான் எனக்குப் புலனாயிற்று. இந்திய விடுதலைக் கனவு கண்டுகொண்டு, வாழ்நாட்களில் எந்நேரமும் இதே சிந்தனையாக இருந்த தேசபக்த சிரோமணிகளில் காலஞ்சென்ற காமா அம்மையார் ஒருவர். பம்பாயில் பார்ஸி ஜாதியிற் பிறந்து மனத்தாங்கலின் காரணமாகத் தம் புருஷராகிய பிரபல வியாபாரி காமாவினிடமிருந்து விலகி, லண்டனில் வெகுகாலம் அவர் வசித்து வந்தார். நான் அவர்களைச் சந்தித்த பொழுது அந்த அம்மையாருக்குச் சுமார் ஐம்பது வயசிற்குமேல் இருக்கலாம். பிள்ளை குட்டிகள் இல்லை. சீமையில் படித்துவரும் இந்திய மாணவி, மாணவர்களையே தம் புதல்வி புதல்வர்களாகக் கருதினார். அவர்களிடம் அரிய அன்பு பூண்டு தாயைப் போலவே அவர்களை நாடி வாழ்ந்து வந்தார். ஐயர், ஸாவர்க்கர், இவர்களிடம் அளவிலா நட்பு. ஏதாகிலும் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்காக அம்மாள் வந்தார்களானால் தமது மடியில் எப்பொழுதும்

வைத்திருக்கும் பட்டுத் தேசிய மூவர்ணக் கொடியை அருகிலிருக்கும் மேஜையிலோ அல்லது நாற்காலியிலோ ஒரு சன்னக் குழாயை நிறுத்தி அதில் பறக்க விட்டுப் பிறகுதான் பேச ஆரம்பிப்பார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளில், "கொடி தாங்கி அம்மையார்" என்று எழுதுவது வழக்கம்.

ஒரு சமயம் பல பிரபுக்கள் சேர்ந்து ஒரு விருந்து நடத்தினார்கள். அந்த விருந்துக்குக் காமா அம்மையாரையும் ஒரு நண்பர் அழைத்துப் போனார். விருந்து முடிவில் மன்னர் வாழ்த்துக்காக எல்லோரும் எழுந்திருந்து சிறிதளவாகிலும் மதுபானம் செய்வது முறை. அப்பொழுது அம்மையாரவர்கள் எழுந்து மரியாதை செய்ய மறுத்து விட்டார்களாம். கூட்டிப் போன சிநேகிதரிடம் அம்மையார் மன்னிப்புக் கேட்டபொழுது, "இங்கிலாந்து மன்னர் என் நாட்டின் மன்னர் என்பதை நான் ஒப்புக் கொள்ள வில்லை. ஆதலால்தான் எழுநூறு பெயர்கள் அடங்கிய கூட்டத்தில் என் தனி மறுப்பைக் காட்ட வேண்டியிருந்தது" என்று சொன்னார்களாம்.

மதன்லால் டிங்ராவின் கொலைக்குப் பிறகு தேசிய உணர்ச்சி யுள்ள இந்தியப் பிரமுகர்கள் லண்டனை விட்டுப் பாரிஸுக்கு வெளியேறினர். அவர்களுள் காலஞ் சென்ற பெரியார் ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவும், காமா அம்மையாரும் முக்கியமானவர்கள். ஐயரும் பாரிஸுக்குப் போனவுடன் காமா அம்மையாரின் நேசம் திரும்பவும் வலுப்பட்டது. அவர்கள் உதவியாலும் ஸாவர்க்கர் மீட்சிக்கான ஏற்பாடுகள் நடந்தன. இதற்கான ஏற்பாடுகளை முன்னமே ஐயர் லண்டனில் செய்து கொண்டு, பிறகு தம் லண்டன் நண்பர் சிலர் மூலமாகப் பூர்த்தியும் செய்துவிட்டார். ஸாவர்க்கரை இந்தியாவுக்குக் காவலுடன் அனுப்பவேண்டும் என்று லண்டன் கோர்ட்டில் தீர்ப்பாகிவிட்டது. தக்க பந்தோபஸ்துடன் கப்பலில் ஏற்றினார்கள்.



கப்பல் லண்டனை விட்டு ஒரு வாரம் பிரயாணம் செய்து குறிப்பிட்ட காலத்தில் பிரெஞ்சுத் தென் துறைமுகமான மார்ஸெயில்சுக்கு வந்து நங்கூரம் போட்டது. விடியற்கால நேரம். காவல் கைதியாக இருந்த ஸாவர்க்கர் மலம் கழிக்கவேண்டும் என்று கோரியதன் பேரில் காவலுடன் கப்பலிலுள்ள க்கூசுக்கு அழைத்துச் சென்றார்கள். காவலாளிகள் அறைக்கு வெளியே காவல் புரிய, ஸாவர்க்கர் உள்ளே நுழைந்து தாழிட்டுக் கொண்டார். அங்கே யிருந்த காற்றுப் புகும் வட்டமான துவாரத்தின் வழியாக நுழைந்து பார்த்தார். துவாரம் இடம் கொடுக்கவில்லை. பிறகு உடுப்பைக் களைந்து மறுபடியும் நுழைந்தார். அப்பொழுது போதுமான இடம் இருந்தது. துவாரத்தின் வழியாகத் தண்ணீரில் குதித்துக் கரையை நோக்கி நீந்திச் சென்றார். அதுசமயம் கப்பலிலிருந்து மேல் தட்டில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் நிர்வாணமாக ஒருவன் கப்பலிலிருந்து குதித்து நீந்திப் போவதைக் கண்டு ஆரவாரம் செய்தார்கள். காவல் புரிந்த காவலாளிகளும் மேலே ஓடிவந்து பார்த்துத் தங்களுடைய கைதி தப்பிப் போவதை உணர்ந்தார்கள். அவர்கள் இருவரும் உடனே தண்ணீரில் குதித்து, "திருடன்! திருடன்! கைதி!" என்று கூவிக் கொண்டே பின் தொடர்ந்தார்கள். நீந்தும் பந்தயத்தில் தம் உயிருக்காக மன்றாடிப் போனவர் ஸாவர்க்கர். தங்கள் உத்தியோகம் போய்விடுமே என்ற பந்தயத்தில் துரத்துபவர்கள் ஆங்கிலப் போலீஸ் காவலாளிகள். ஸாவர்க்கரே முந்தி நீந்திக் கரை சேர்ந்தார். கரையிலிருந்து அவரை மீட்பதற்காக ஐயரும் காமா அம்மையாரும் மோட்டார் கார் ஒன்றில் இன்னும் இரண்டு நண்பர்களுடன் காத்திருந்தனர். கரைக்கும் மோட்டார் நின்ற இடத்திற்கும் சுமார் கால்மைல் தூரம் இருக்கும். "திருடன், திருடன், பிடி, பிடி, பிடி" என்று கூவிக் கொண்டு இரு போலீஸ்காரர்களும் நீச்சல் பந்தயம் முடிந்து

ஓட்டப் பந்தயமாக மாறி ஸாவர்க்கரைத் துரத்திப் பின்தொடர்ந்தார்கள். பிரெஞ்சுப் போலீஸ்காரன் நிர்வாணமாக முந்தியோடும் ஸாவர்க்கரைப் பிடித்து நிறுத்தி விட்டான். அதற்குள்ளாகக் கப்பல் சேவகர்களும் வந்து தங்கள் கைதியைத் திரும்பவும் கொடுத்து விடவேண்டும் என்று வாதாடினார்கள். அதற்குள் ஐயர் முதலியோர் ஓடிவந்து, "இது பிரெஞ்சு எல்லை. இதில் ஆங்கில அதிகாரிகள் வந்து யாரையும் கைது செய்யக் கூடாது" என்று தடுத்தார்கள். பிரெஞ்சுப் போலீஸ்காரன் அவர்கள் சொல்வதைக் கேளாது ஸாவர்க்கரை ஆங்கிலக் கப்பல் போலீஸ்காரர் வசமே பிடித்துக் கொடுத்துவிட்டான். தப்பியோடும் முயற்சி பலனளிக்க வில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. பிரெஞ்சுத் தேசத்தின் எல்லைக்குள் ராஜீயக் கைதிகளை ஆங்கில அதிகாரிகள் பிடிக்க நியாயம் இல்லை. இருந்த போதிலும் அநீதி நடந்து விட்டது. பாரிஸ் நகரத்துப் பத்திரிகைகளில் இதைப்பற்றி முறையிடவே பிரெஞ்சுக் கவர்ன்மெண்டார் ஆங்கிலேயருக்கு எழுதி ஆட்சேபித்தார்கள். முடிவில் இந்த விவகாரத்தைச் சுதந்தர நாடுகளுக்கு நியாயம் விசாரிக்கும் "ஹேக் கமிட்டி" யாருக்கு விட வேண்டியது என்று முடிவு செய்துவிட்டார்கள். "ஹேக் கமிட்டி" யாரும் நியாயப் பிசகு இல்லை என்று தீர்ப்புக் கூறி விட்டார்கள்.

இதனால் ஐயருக்கு உண்டான வருத்தத்திற்கு அளவில்லை. தம் குருவும், நண்பருமாகிய ஸாவர்க்கரைக் காப்பாற்ற முடியவில்லை. ஸாவர்க்கரை இந்தியாவிற்குக் கொணர்ந்து தீவாந்தர தண்டனை ஆயுள் முடியக் கொடுத்து விட்டார்கள். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஐயர் பாரிஸில் தங்கி விட்டார். லண்டன் வரவே இல்லை. அப்படி ஒரு சமயம் வந்திருந்தால் ஸாவர்க்கருக்கு ஏற்பட்ட கதிதான் அவருக்கும் கிடைத்திருக்கும் என்பதற்கு ஐயமில்லை. பாரிஸ் நகரத்திலேயே ஆங்கில ரகசியப் போலீஸார் தம்மைப்



பின்பற்றித் துப்பறியும் வேலை செய்து வருவதையும் அவர் அறிந்து கொண்டார். இதுவே அவர் லண்டன் திரும்பாததற்குக் காரணம். சுமார் ஒரு வருஷத்திற்கு மேலாகவே பாரிஸில் தங்கியிருந்தார்.

தேச விடுதலைக்காக உழைக்கவேண்டி விரதம் பூண்ட ஐயருக்குப் பாரிஸில் வீணே வசிப்பது சிறை வாசம் போலவே இருந்தது. என்ன நேரிடினும் தாய் நாட்டிற்கு எவ்விதமாகிலும் திரும்பவேண்டும் என்கிற அவா அதிகரித்தது. கடைசியாகப் பிரான்ஸை விட்டுப் புறப்பட்டு விடவேண்டும் என்று முடிவு செய்தார். ஆங்கில உளவுப் போலீஸ்காரர்களுக்குத் தெரியாமல் கப்பல் ஏற வேண்டி மாறுவேஷம் பூணுவதற்கு ஏற்பாடுகள் செய்தார். ஏற்கனவே வளர்த்த சிறு தாடியைப் பேணி நீளமாக வளர்க்க ஆரம்பித்தார். சில மாதங்களுக்குள் உருத் தெரியாமல் தாடி நீண்டு பரவி விட்டது. அந்தணர் குலத்தவர் இஸ்லாமியப் பக்கிரியாக மாறினார். அதற்கான சின்னங்கள், முஸ்லீம் பழக்கங்கள், பேச்சு இவைகளுடன் உளவுப் போலீஸ்காரர்களுக்குத் தெரியாமல் இந்தியாவிற்குப் பிரயாணமானார். எகிப்து சென்று சில நாட்கள் அங்கே தங்கி, பிறகு கொளும்பு வந்து, அங்கிருந்து வேறு கப்பலில் ஏறிப் புதுச்சேரி வந்து, அங்கே தேச பக்தரும், அடைக்கலம் புகுந்திருந்த இந்தியர்களுக்குத் துணையாக இருந்து வந்தவருமான ஸ்ரீநிவாஸாசாரியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அங்கே பாபு அரவிந்த கோஷ், சுப்பிரமணிய பாரதியார் முதலிய பெரியார்களுடைய கோஷ்டியில் சேர்ந்தார். தாடி இவருக்கு உருமாறவும், தாய் நாடு சேரவும், போலீஸ் அதிகாரிகளை ஏமாற்றவும் பயன் பட்டது. தாடியின் மகத்துவந்தான் என்ன! புதுச்சேரி வந்த ஆறு மாதங்களுக்குப் பிறகே அதிகாரிகளுக்கு ஐயர் போன இடம் தெரிய வந்தது.

# 5

## இறுதிக்காலம்

அரிச்சந்திர கோரேகாவ்கர் ஒரு குள்ளர். வயசு சுமார் இருபத்து மூன்று இருக்கலாம். தலையில் சுருண்ட குட்டை மயிர். சிறிய கண்கள். பருத்த மூக்குக் கண்ணாடிகள். தென்னிந்தியரைப் போன்று நிறமுள்ள மேனி. உணர்ச்சி ததும்பும் முகம். மராட்டிய ஜாதி. மகாராஷ்டிரத்திலுள்ள கோரேகாவ் என்ற கிராமத்தவராகையால் தம் பெயருடன் ஊர்ப் பெயரையும் அவ்வூரார் வழக்கம் போலச் சேர்த்து வைத்துக்கொண்டவர். அவருடைய பெயர் அரிச்சந்திரன் என்று எனக்கு வெகுநாட்கள் வரையில் தெரியாது. அரிச்சந்திரன் என்று பெயர் பூண்டவர்கள் எல்லோரும் உண்மை அரிச்சந்திரன் போல நடந்திருப்பார்களே ஆனால் நமது நாட்டின் சரித்திரம் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும். குருடனுக்குச் செந்தாமரைக்கண்ணன் என்று பெயர் வைப்பது போல, வளரும் மகன் எவ்விதம் இருப்பான் என்று தெரியாத பெற்றோர்கள் அவருக்கு அரிச்சந்திரன் என்று நாமகரணம் செய்துவிட்டார்கள். நான் லண்டனில் அவரை முதல் முதலாகச் சந்தித்த பொழுது இவர் தோற்றத்திலேயே எனக்கு ஒரு வெறுப்பு உண்டாயிற்று. நாளடைவில் வெறுப்பு நட்பாக மாறிவிட்டது. அவர் விநாயக ஸாவர்க்கருக்கு உயிர்த்தோழர். குவாலியர் சமஸ்தானத்தில் உபகாரச் சம்பளம் பெற்று லண்டனில் இஞ்சினீயரிங் தொழிலுக்குப் படித்து வந்தவர்.

1908-ஆம் வருஷத்தில் எனக்குத் தேசபக்தி உணர்ச்சி இருந்ததாகச் சொல்ல முடியாது. உயர்தர



ஆங்கில மருத்துவ முறையைக் கற்க வேண்டி லண்டன் சென்ற நான் தேசபக்தியின் மிகுதியால் அங்கே சென்றிருந்தேன் என்று சொல்வது பொருந்தாது. அது உண்மையும் அன்று. இங்கிலாந்து சுதந்தர நாடு. "சுதந்தரமணம் கமழ்கிறது" என்று மேடைப் பிரசங்கிகள் அடிக்கடி சொல்வதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். ஆனால் அதை அநுபவித்ததில்லை. சுதந்தரக் காற்று வீசுவதைச் சுதந்தர நாடுகளில்தான் உணர முடியும். அடிமைகளால் உணர இயலாது. சுயநலப் பூச்சிகள் இந்தக் காற்றை உட்கொள்ள முடியாது.

தாய் நாடு என்பது மண்ணும், மலையும், நதியும் மட்டும் அல்ல. கலை, சமூக இயல்பு, இன்பம், துன்பம், கல்வி, உணர்ச்சி - நிறங்கூட - இவைகளை யெல்லாம் கொண்ட ஓர் உயிர்ச் சக்தி - மனித சமூகத்திற்கே நம்முடையது என நாம் பல்லாண்டுகளாக அளித்து வரும் தனிப் பெருஞ்செல்வம். நமது மூல தனத்தின் ஒரு சிறு பகுதியையாகிலும் உணரக்கூடியவன் தேச பக்தன். "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்றார் பெரியார் பாரதியாரும். அவரைப் போன்ற தேசபக்தர்கள்தாம் அந்தச் சக்தியை மூச்சினில் காணக்கூடும். வயிற்றுப் பிழைப்பு மேடைப்பிரசங்கி, கூலி எழுத்தாளர்கள், ஒரு வேளை உணவிற்காகப் பாடும் கவிராயர்கள் - இவர்கள் எல்லோரும் தேசபக்தனுடைய உடையில் நம் நாட்டில் அலைந்து திரிகிறார்கள். இவர்களால் நமது விடுதலைக் காலமும், சுதந்தரமும் பகற்கனவே ஆகிவிடுகின்றன.

அந்தக் காலத்தில் 'தேசபக்தி' என்பதற்கு என்னைப்பற்றிய மட்டில் சில வேலைகள் செய்வதுதான் கடமை என்று நினைத்திருந்தேன். தேசியப் பத்திரிகைகளை ஒன்றிரண்டு படிப்பது, ஏதாகிலும் பொதுக் கூட்டங்களில் நமது கல்வித் திறமையைச் சொற்பொழிவுகளால் கேட்போர் வியக்கும்படி செய்வது,

அந்நிய நாட்டினர் நடை உடை பாவனைகளை நாம் பின் பற்றிக்கொண்டே மற்றவருக்குத் தேசியத்தின் பெருமைகளை எடுத்துரைத்துப் பின்பற்றுமாறு வேண்டுவது – நல்ல வேளையாக அந்தக் காலத்தில் கதர் ஆடை பிறக்கவில்லை - இவை தாம் தேசசேவை, தேசபக்திக்கு அறிகுறி என்பது என் எண்ணம். நான் தேசபக்தியின் தத்துவத்தை ஒருவாறு அறியும்படி செய்தவர் இருவர். வ. வே. ஸு. ஐயர் இம்முறையில் எனக்குக் குரு. நண்பர்கள் என்கிற முறையில் வாதாடி, தங்கள் கற்பனா சக்தியினால் உள்ளத்தில் பதியும்படி செய்தவர்களில் அரிச்சந்திர கோரேகாவ்கர் ஒருவர். தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நேட்டாலில் குடியேறிய ரத்தின பத்தர் என்கிற தமிழர் மற்றொருவர். இருவரிடத்திலும் நாவன்மை அதிகம். தேசபக்தி உணர்ச்சி சற்றேனும் இருக்குமானால், அவர்களோடு பேசினால் அது மேன்மேலும் வளர்ந்து ஓங்கி வேரூன்றிவிடும். அவர்களுக்குப் பேச்சுத் திறமையோடுகூட, உணர்ச்சித் திறமையும் அதிகம்.

கோரேகாவ்கர் சிவாஜி சரித்திரத்தைப் பற்றி உருக்கமாகச் சித்திரிக்கும் பொழுது தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து உள்ளம் உருகுவார். ரத்தின பத்தர் கோபம் மூளும்படி அடிமை வாழ்வைப்பற்றிப் பேசும் பொழுது குத்திக் குத்திக் காண்பிப்பார். சர்க்கார் உத்தியோகத்திற்காக ஐ. எம். எஸ். போட்டிப் பரீக்ஷைக்குப் போக எண்ணியிருந்த என் உணர்ச்சியைப் பெருக்கி, மனம் மாறும்படி செய்ததற்கு இவர்கள் இருவருமே காரணம். ரத்தின பத்தர் பாரிஸ்டர் வேலைக்குப் படிப்பதற்காக லண்டன் வந்திருந்தவர். முகவெட்டுத் தமிழ் நாட்டினரைப் போல இருந்தாலும், நிறத்தில் நல்ல நீக்ரோ ஜாதியாரைப் போன்றவர். ஸாவர்க்கரிடத்தில் பரம பக்தி. எனினும் அவருடைய சலனமுள்ள கண்களைக் கவனித்தால் உறுதியான சித்தம்



உடையவர்போலத் தோன்றாது. உயர்ந்த தொப்பி, நீண்ட சட்டை, கைமூடி உறை, பிரம்பு, பளிச்சென்று வர்ணம் தோய்க்கப்பெற்ற உயர்தர பூட்ஸ்– இவைகளை அணிந்து செல்வம் படைத்த பெற்றோர்களின் மகன் என்பதை ஆங்கில மக்கள் அறியும் வண்ணம் நடந்துகொள்வார். தமிழராயினும் எப்பொழுதும் ஆங்கிலமே பேசிப் பழகியவர். ஆத்திரமும் ஆவேசமும் உண்டு. அதற்கேற்ற தேசபக்தி இல்லை. எனினும் எனக்குத் தேசப்பற்று உண்டுபண்ணினவர்களில், நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகியான அரிச்சந்திர கோரேகாவ்கரும் பக்குவமடையாத துணிச்சலுள்ள ரத்தின பத்தரும் அடிகோலினவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

கோரேகாவ்கருக்கு மாதந்தோறும் இருபது பவுன்கள் உபகாரச் சம்பளமாகக், குவாலியர் சமஸ்தானத்தார் கொடுத்துவந்தார்கள். அவர் அந்தத் தொகை முழுவதையும் தம் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வதில்லை. வேண்டிய அளவு சாமான்ய வாழ்க்கைக்கு எடுத்துக் கொண்டு மிஞ்சிய தொகையை முற்றும் "சுதந்தர இந்தியா" இயக்கத்திற்காக ஸாவர்க்கரிடம் கொடுத்து வந்தார். மாதம் இருமுறை நடக்கும் எங்கள் கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து உருக்கமான சொற்பொழிவு ஆற்றுவார். ஸாவர்க்கருடன் கூடித் தனிமையாக வெகு நேரம் ரகசியமாகப் பேசிப் போவார். எங்கள் இயக்கத்தில் ஸாவர்க்கர், ஐயர் – இவர்களுக்கு அடுத்தபடியான முக்கியஸ்தர் கோரேகாவ்கர் என்பது என் எண்ணம். அவர் இந்தியாவிற்குச் சென்றபிறகு சுதந்தர இயக்கத்திற்கு ஒரு மூல புருஷராக விளங்குவார் என்று நினைத்தேன்.

1909–ஆம் வருஷக் கடைசியிலோ, 1910–ஆம் வருஷ முதலிலோ அவர் இந்தியாவிற்குத் திரும்பியதாக என் ஞாபகம். இந்தச் சுதந்தர தீரருடைய மகத்துவத்தை நாங்கள் எதிர்பார்த்தவண்ணமாக

இருந்தோம். 1910-ஆம் வருஷத்தில் ஸாவர்க்கர் கைதியானதும், அவரை இந்தியாவிலேயே விசாரணை செய்ய ஏற்பாடுகள் முடிவடைந்து இங்கே கூட்டி வருவதற்காக லண்டன் கோர்ட்டில் அப்புறப் படுத்த (extradition) உத்தரவு கோரும் சமயத்தில், இந்திய சர்க்காரால் தாக்கல் செய்யப்பட்ட அத்தாட்சிகளின் நகல்களைக் கோரி அவருடைய வக்கீல் மனுச் செய்து கொண்டார். அதன் பயனாகக் கிடைத்த ஆதாரங்களில் சுமார் நூற்றிருபது பக்கங்கள் கொண்ட, டைப் அடித்த, பிரமாண வாக்கு மூலம் ஒன்று. அதுதான் கோரேகாவ்கர் இந்தியாவுக்கு வந்து செய்த "சுதந்திர முயற்சி."

அந்த வாக்கு மூலத்தில் கண்டிருந்த விஷயங்களில் முக்கியமானவை பின் வருமாறு:

"நான் லண்டனில் இருக்கும்போது புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருந்தது உண்மை. நானும் என் தோழர்களும் இந்தியாவின் விடுதலைக்காக அல்லும் பகலும் உழைத்து வந்தோம். இங்கிலாந்திலுள்ள சுதந்தர அநுபவமே எங்களை அப்படிச் செய்யத் தூண்டியது. மேலும் நாங்கள் எல்லோரும் இளைஞர்கள். இந்தியா சுதந்தரமடைய வேண்டும் என்கிற உணர்ச்சியின் மிகுதியால் பல வேலைகளில் ஈடுபட்டோம். இப்பொழுது தாய்நாடு திரும்பி, இங்குள்ள நிலைமையைக் கவனிக்கும் பொழுது நம் மக்கள் சுதந்தரத்திற்கு உரிமையுடையவர்கள் அல்லர் என்ற முடிவிற்கு வந்து விட்டேன். மேலும் ஸாவர்க்கர் கோஷ்டியார் லண்டனில் செய்யும் முயற்சிகளால் இன்னும் பல இந்திய மாணவர்கள் என்னைப் போலவே அந்தக் கூட்டத்தாருள் சிக்கிக் கொள்வார்களாகையால், அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டுள்ளேன். அதற்காக என்னுடைய சொந்த இஷ்டத்தின்பேரில் யாராலும் வற்புறுத்தப்படாமல் இந்த வாக்குமூலத்தை எழுதுகிறேன்". இம்மாதிரி ஆரம்பித்து ஆதியோடந்தமாக லண்டனில் நடந்த



கிளர்ச்சிகளின் வரலாறு முழுமையையும் எழுதி இந்தியப் போலீஸ் அதிகாரிகளிடம் கொடுத்து விட்டார்.

ஸாவர்க்கருக்கு இவரைக் காட்டிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமான உண்மையான தோழர் வேறொருவரும் இல்லை. தன் கையே தனக்கு மோசம் செய்தால் யார் என்ன செய்யக்கூடும்? இந்த நிலையில் விசாரணை நடந்து ஸாவர்க்கர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். கோரேகாவ்கர் வாக்கு மூலத்தில் கண்டிருந்த இரண்டாவது பேர்வழி நம் வ. வே. ஸு. ஐயர். ஸாவர்க்கருக்கு நேர்ந்த கதி அவருக்கும் நேரும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவிலிருந்து அவரையும் அப்புறப்படுத்த, போலீஸ் உத்தரவுகள் தயாராகி அனுப்பப்பட்டுச் சீமைக்கு வந்து கொண்டிருந்தன. அதற்குள்ளாக ஐயர் ஒருவருக்கும் தெரியாமல் பாரிஸ் நகரத்திற்குக் கம்பி நீட்டிவிட்டார்.

1919-ஆம் வருஷத்தில் மறக்கமுடியாத ரௌலட் கமிட்டி ரிபோர்ட்டில் முதல் மூன்று அத்தியாயங்கள் அநேகமாய் ஸாவர்க்கர், ஐயர், சீமையில் நடந்த கிளர்ச்சி, கன்ஸன் வைலி கொலை—இவைகளைப் பற்றியனவே. இதற்கு மூல ஆதாரம் கோரேகாவ்கருடைய வாக்குமூலமாகவே இருக்கவேண்டும் என்பது என் எண்ணம். கோரேகாவ்கரைப் போன்ற விஷப் பாம்புகள் இந்தியாவில் புதிதாக உண்டானவை அல்ல. நமது தேசத்தின் வீழ்ச்சிக்கு இவைகள் இன்றியமையாத சாதனங்கள். சுயநலம் என்பது மனிதனுடைய இழிந்த குணங்களில் ஒன்று. எனினும் பெரும்பான்மையோருக்கு வாழ்வில் சுயநலத்திற்குக் கூடப் பிறநலம் கருதுவது ஒரு தக்க முறை என்பது தெரிகிறதில்லை. சுயநலத்தை எண்ணி இன்னவற்றைச் செய்யலாம், இன்னவற்றைச் செய்யக் கூடாது என்பதை வரையறுக்க உண்மைக் கல்விப் பயிற்சியும் ஒழுக்கமும் வேண்டும்.

அடிமைப்பட்ட நாட்டில் சுயநலம் ஒன்றேதான் போற்றப்படுகிறது. மக்களின் வீழ்ச்சிக்குச் சுயநலம் காரணம். மீளவொட்டாமல் தடுத்துக்கொண்டிருப்பதும் சுயநலமே. இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த கிரேக்கரை எதிர்த்த போரஸ் மன்னன் காலம் தொடங்கி, பிரதாபசிம்மன், ஸிராஜிடௌலா காலம் வரையில் நமது நாட்டில் மீர் ஜாபர்களுக்குக் குறைவே இல்லை. ஐந்தாம்படை என்று தற்காலத்தில் மீர் ஜாபர்கள் கூட்டங் கூட்டமாக முன் வந்து விட்டார்கள் போலும்! ஆனால் உலகம் என்றென்றும் மீர் ஜாபர்களுக்குத்தானா? கோரேகாவ்கர் நாட்டையும் நண்பர்களையும் காட்டிக் கொடுத்துவிட்டார். அதனால் சற்று ஊதியம் அதிகம் பெற்றிருக்கலாம். உலகம் அவரை மறந்துவிடும். நான் என் கட்டுரைகளால் அவரை உயிர்ப்பித்தாலும், அவர் இறந்தவர் போலத்தான். அவரால் இருமுறை தீவாந்தர தண்டனை அடைந்த ஸாவர்க்கரையும், ஓடி ஒளிந்து பன்னிரண்டு வருஷம் அஞ்ஞாத வாசம் செய்த ஐயரவர்களையும் நம் மக்கள் மறவார். அவ்விருவரும் சுயநலத்தை வென்ற தீரர்கள்; தேசபக்தியாகிற வெள்ளத்தில் ஆழ்ந்தவர்கள்.

தமிழ் நாட்டிற்கு ஐயர் செய்த தொண்டு வெகு குறுகிய காலம். அவர் அற்ப ஆயுள் பெற்றுவிட்டார். உண்மைத் தமிழனுக்குரிய உணர்ச்சியினால் உயிர் துறந்தார். தம் அருமை மகளை உய்விக்க எண்ணி, கோரமான நீர் வீழ்ச்சியின் சக்தியைப் பொருட்படுத்தாமல் மாய்ந்தார். தூய சேவை, புனித வாழ்வு, மாசற்ற உள்ளம், தமிழ் மொழியிடத்து அளவிலாத அன்பு - இவற்றோடு பாரதநாட்டிற்கு அஞ்சா நெஞ்சத்துடன் தொண்டு புரிய அரும் புதல்வர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார்.

புதுச்சேரியிலிருந்து விடுதலை பெற்று, 1920-ஆம் வருஷம் அவர் சென்னைக்கு வந்து, "தேசபக்தன்" என்னும் தினசரிப் பத்திரிகைக்கு ஆசிரியராக



இருந்து செவ்வனே நடத்தி வரும்போது மகாத்மாஜியின் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாயிற்று. சர்க்காரின் கவனம் அந்தப் பத்திரிகைமீது பாய்ந்தது. ஆசிரியர் என்ற முறையில் ஒன்பது மாதம் சிறைவாசமும் கிடைத்தது. சிறையிலிருந்து வெளி வருகையில் "தேசபக்தன்" மறைந்து விட்டது. நாட்டின் விடுதலைக்குத் தகுந்த வீரர்களைத் தயாரிக்க வேண்டும்; அவர்கள் சிறு வயசிலேயே பிரம்மசரிய விரதம் பூண்டு, ஆசிரமத்திலேயே தம்முடன் தங்கிப் பண்டைக்கால முறைப்படி வளரவேண்டும் என்று முடிவு செய்தார். திருநெல்வேலி ஜில்லாவில் சேரமாதேவிக்கு அருகில் இதற்கென்றே ஓர் இடம் வாங்கி ஆசிரமத்தைத் துவக்கினார். தமிழ் மக்கள் அவர் முயற்சிக்கு வேண்டிய ஊக்கம் அளித்துப் பண உதவியையும் அளித்தார்கள். காங்கிரஸும் 'தேசீயக் கல்வி நிதி'யிலிருந்து பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாகத் தீர்மானம் செய்து, முதல் தவணையாக ஐயாயிரம் ரூபாய்களைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியார் கொடுத்து உதவினார்கள். வடநாட்டில் சுவாமி சிரத்தானந்தர் நடத்தி வந்த குருகுலங்களைப் போல் தமிழ் நாட்டிலும் நிறுவ வேண்டி "தமிழ் நாட்டுக் குருகுலம்", "பாரத்துவாஜ ஆசிரமம்" என்று இப்பயிற்சி நிலயத்துக்குப் பெயரிட்டார். தேசபக்தி நிறைந்துள்ள இளைஞர்களிற் சிலரையும் தம் உதவிக்குச் சேர்த்துக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தமக்கு அடுத்த பதவியில் ஊழியம் புரியத் திருநெல்வேலி மகாதேவையரையும் சேர்த்துக்கொண்டார். தொண்டிலும், தியாகத்திலும் மேம்பட்டவர் மகாதேவையர்; சிறந்த தேசபக்தர். காங்கிரஸ் இயக்கத்தில் ஆதிமுதல் ஈடுபட்டவர். தம் வக்கீல் தொழிலைத் துறந்து, தம் சக்தியை முற்றும் நாட்டிற்கு அளித்தவர். சிறைத் துன்பங்களை அநுபவித்தவர். அப்படியிருந்தும் ஸநாதன சிஷ்டாசாரங்களை விட்டுவிடுவதில் பிரியம் இல்லாதவர்.

மலாய் நாட்டிற்குச் சென்று அங்கே கொண்டு விற்றுத் தொழில் நடத்திவரும் தமிழ் நாட்டுத் தன வைசியச் செட்டிப் பிள்ளைகளிடம் ரூபாய் இருபதினாயிரத்திற்கு மேல் குருகுலத்துக்காகச் சேகரித்து அவர்களிடமே அதை ஒப்படைத்துத் திரும்பினார்.

பாரத்துவாஜ ஆசிரமத்தில் குருகுல வாசம் செய்யும் இளைஞர்கள் சுமார் இருபது பேர்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர் உணவுப் பந்தியில் மற்ற எல்லோருடனும் உட்காராமல் தனித்து, உண்டு வந்தனர். இதில் மனக்கசப்பு ஏற்பட்டது. 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்' என்று பறை சாற்றிய தமிழ்க் கவியரசு சுப்பிரமணிய பாரதியாரின் ஆத்ம நாதம் தமிழர்கள் நெஞ்சில் உதயம் ஆகிவிட்டது. கல்வி நிலயத்தில் குருகுலவாசம் செய்யும் ஒரு குடும்பத்தில், தனித்து உண்ணல் ஏற்றத் தாழ்வை உண்டு பண்ணியது. அது காரணமாகப் பத்திரிகைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. இந்தக் கிளர்ச்சியைப் பலப்படுத்தியவர்கள் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுகாருவும் ஈ. வே. ராமசாமி நாயக்கரும் ஆவர். எனக்கும் உணவுப் பந்தியில் வேறுபட்டு உட்கார்ந்து உண்ணுவது நியாயமாகத் தோன்றவில்லை. அப்படித் தனித்து உண்ண விரும்புபவர்களுக்குக் குரு குலத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்பது என் முடிவு. ஐயரிடம் என் எண்ணத்தைப் பன்முறை தெரிவித்து வாதாடினேன். பயன் இல்லை.

பிள்ளைகளைக் கட்டாயப் படுத்திச் சமபந்தி உணவு கொடுக்கவோ அவர்களை வெளியேற்றவோ ஐயர் உடன்படவில்லை. ஆசிரம வேலை பல துறைகளில் விரிந்து விட்டது. அச்சுக்கூடம், மாத வெளியீடான 'பால பாரதி', ஐயர் எழுதிய பல நூல்களை அச்சிடும் வேலை, புத்தகசாலை, சீடர்களின் கல்வி, விவசாயப் பண்ணை முதலிய பலவேலைகளை ஐயர் தனியாகக் கவனிக்க இயலவில்லை. தம் உள்ளத்தில்



அடங்கிக் கிடந்த சீரிய தேசபக்திக்கு ஒத்த வண்ணம் மாணவர்களைத் தயாரிக்கும் பக்குவம் அடைந்த உதவி ஆசிரியராக இருந்து பல துறைகளிலும் தொண்டாற்றி வந்தவரைப் புறக்கணிக்க முடியாமல் வருந்தினார்.

தமிழ்நாடு மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வரதராஜுலு நாயுடுகாருவும் ராமசாமி நாயக்கரும் வற்புறுத்தினார்கள். மகாத்மா காந்தியிடம் இந்தச் சச்சரவு கொண்டு போகப்பட்டது. உடன் உண்ணல் கொள்கையைக் கட்டாயப்படுத்துவதில் தமக்கும் இஷ்டம் இல்லை என்று அவர் சொல்லிவிட்டார். மகாத்மாகாந்தி, வர்ணாசிரம தர்மத்தின் பாகுபாடுகளை முற்றும் பின்பற்ற வேண்டும் என்று தம் வாழ்நாட்களில் அம் முறையைக் கைவிடாது நடத்துவதில் ஈடுபட்டவர். ராமசாமி நாயக்கருக்கு, காந்தியடிகளின்மீது இந்தக் கொள்கைக்காகக் கடும் சீற்றம் உண்டாயிற்று.

உடன் உண்ணலுக்கும் வர்ணாசிரமதர்மத்திற்கும் என்ன தொடர்பு என்பதைப் பற்றி ஆராய்பவரைக் காணவில்லை. இந்த இரண்டையும் சேர்த்துக் குறை கூறுபவர்களுடைய கட்சி ஒன்றேதான்; "வர்ணாசிரம தர்மம் என்பது பிராமணர்களுடைய சூழ்ச்சி. பாரத்துவாஜ ஆசிரமத்தில் உடன் உண்ணலும் வர்ணாசிரம தர்மத்தைச் சேர்ந்தது. இரண்டையும் ஒழிக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்ப்புக் கொடுக்கவேண்டும்." இதுதான் கட்சி. "சேரமாதேவிப் பாரத்துவாஜ ஆசிரமத்தில் உடன் உண்ணல் நடக்கவேண்டும். இல்லாவிடில் அந்த முறையைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி கண்டிக்கவேண்டும். ஐயர் காங்கிரஸ் கமிட்டி மூலம் பெற்ற உதவியைத் திருப்பவேண்டும். கொடுப்பதாக வாக்களித்த பாக்கி ரூபாய் ஐயாயிரத்தையும் கொடுக்கக்கூடாது" என்ற முறையில தீர்மானம் நிறை

வெறியது. "மலாய் நாட்டில் மகாதேவையரால் ஆசிரமத்திற்குத் திரட்டப்பட்ட நிதியைக் கொடுக்கக் கூடாது. பிள்ளைகள் ஆசிரமத்திலிருந்து விலக வேண்டும்" என்று கூறினார்கள். ஆசிரமத்தை அடியோடு ஒழிக்கவேண்டிய முயற்சி தீவிரமாக நடந்தது. உதவி செய்ய முன்வந்த தனவைசியர்கள் உதவியை நிறுத்திவிட்டார்கள். ஆசிரமத்தில் மாணவர்களும் குறைந்து விட்டனர். செலவோ குறையவில்லை. ஆசிரமம் ஆரம்பித்தது. 1922-ஆம் வருஷக் கடைசியில்.

இந்தச் சச்சரவு 1924-ஆம் வருஷக் கடைசியில் துவங்கிற்று. 1925-ஆம் வருஷம் ஜூலை 3உ யன்று பாபநாசம் நீர்வீழ்ச்சியில் தம் மகளைக் காப்பாற்றும் பொருட்டு ஐயர் உயிர் துறந்தார்.

தேச ஊழியத்திற்கும் தேச விடுதலைக்கும் அவர் மனதிலுள் கொண்டிருந்த கற்பனைகள் அளவிட முடியாதன. பண்டைக்காலத்து ரிஷிகளின் வாழ்வு அவர் மனத்தைப் பற்றியது. தம் நடை, உடை பாவனை, உணவு, தீரம், வைராக்கியம் எல்லாம் ரிஷிகள் போல இருக்கவேண்டும் என்று அவா அவருக்கு. வாழ்வையும் அம்மாதிரியே நடத்தினார். தமிழ்மொழியில் அளவிலாத அன்பு. வருஷம், மாதம், தேதி எல்லாம் தமிழ் எழுத்துக்களில்தாம் எழுதுவார். தமிழ்க் கணக்கு முறையை மிக உயர்ந்ததாகக் கருதி மாணவர்களுக்கு அந்த முறையைப் பயிற்றுவித்தார். ஆறு பாஷைகளில் தேர்ச்சி பெற்றும், தமிழின் வளர்ச்சியும் வன்மையும் மற்றவைகளில் இல்லை என்ற உண்மை உணர்ச்சி பெற்றவர். இறக்கும் பொழுது வயசு நாற்பத்து நான்கு. எடுத்துக்கொண்ட வேலைக்கு வயசு போதாது. அற்ப ஆயுள் பெற்று விட்டார்.

சுப்பிரமணிய பாரதியார் வாய்விட்டு அலறிய விடுதலை நாதத்தைப் புதுச்சேரியில் அவருடன்



இருந்த காலத்தில் நேரில்கேட்டு, அதைத் தமது ஆத்மநாதமாக அநுபவித்தவர் ஐயர். விடுதலை வேண்டும். தேசிய விடுதலை மட்டுமா? சாதிப் பூசல்களினின்று விடுதலை; மதக் கோட்பாடுகளிலிருந்து விடுதலை; வெளி வேஷத்தினின்று விடுதலை; சுயநலப்பற்றிலிருந்து விடுதலை; நாட்டைக் காட்டிக்கொடுக்கும் ஈன மனப்பான்மையினின்றும் விடுதலை; எண்ணற்ற சடங்குகளினின்றும் விடுதலை; மக்கள் மனத்தைக் கவர்ந்து, மூளையை மயக்கி, கொலை, களவு இவற்றுக்கும் அஞ்சாத கொடுந் தொழிலில் இறக்கி ஈவு, இரக்கம் இன்றிப் பேய் என்றும், காட்டேரி என்றும் நமது இல்லற வாழ்க்கையைத் துன்புறுத்தும் அறிவீனத்தினின்றும் விடுதலை; உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இவைகளுக்கு அடிப்படையான காரணங்கள் இன்னவை என்று தெரியாமல் அவதிப்படும் மடமையினின்றும் விடுதலை; உண்மைக்கு உழைக்கும் உறுதியின்றிக் கோழைத்தனத்தோடு அடிமை பூண்டு மருண்டு கிடக்கும் வாழ்வினின்றும் விடுதலை; இத்தகைய எல்லா விடுதலைகளும் வேண்டும். நாட்டின் மக்களை, இளைஞர்களை, ஆண் பெண் இருபாலர்களையும், தேச சேவையில் ஈடுபடுத்துவதற்கு, சிறு வயசு முதல் பண்படுத்த வேண்டும் என்று துவக்கிய முயற்சி, எதிர்பாராத விபத்தின் காரணமாகச் சிதைந்து விட்டது. ஐயருடனே அவருடைய ஆசிரமமும் முடிவடைந்து விட்டது என்று சொல்லலாம்.

மகாதேவையர் ஆசிரமத்தை விடாது நடத்த முயன்றார். ஆசிரம ஊழியர்கள் விலகிவிட்டார்கள். மாணவர்கள் போய்விட்டார்கள். அவரை அவ்விடத்தை விட்டுத் துரத்த, பலாத்காரமான முயற்சிகள் நடந்தன. புத்தக சாலையிலிருந்து புத்தகங்கள் எடுக்கப்பட்டன. சாமான்கள் அப்புறப்படுத்தப் பட்டன. அச்சுக்கூடம் கலைக்கப்பட்டது. மகாதேவையருடைய தாடி பட்ட பாடு பரிதவிக்கத்

44368 V2:51



அவரை லண்டனுக்குப் படிக்க அனுப்பிய அவருடைய மனைவியையும் மகனையும் ஆயிரக்கணக்காகச் செலவு செய்து காப்பாற்றியவர் பங்களூரில் இருந்துவரும் அவருடைய மைத்துனர் கொடை வள்ளல் பசுபதி ஐயர் அவர்கள். ஐயர் மகன் வைத்தியப் படிப்பில் ஈடுபட்டு, தற்சமயம் நல்ல வருவாயுடன் திருச்சிக்கு அடுத்த மண்ணச்சநல்லூரில் தொழில் நடத்தி வருகிறார். ஐயருக்கு இருந்த திறன் அவர் மகனுக்குத் தொழில் மூலமாகக் கிடைக்கிறது. தாயும், மகனும், பேரப்பிள்ளைகளுடன் வாழ்வு நடத்துகிறார்கள். அவர் குமாரர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் நல்ல ஒழுக்கமும் உத்தம குணமும் பொருந்தியவர்.

ஐயருடைய ஜீவன் நம் நாடு விடுதலை அடையும் மட்டும் சாந்தி அடையாது. ஆயிரம் வருஷங்களாக அடிமைப்பட்ட நாடு விடுதலை பெறவேண்டுமானால் அதற்குத் தகுந்தபடி விலை கொடுத்தாகவேண்டும். ஐயரைப் போன்ற தேசபக்தர்களும் தூய வாழ்வு நடத்துபவர்களும் லக்ஷக்கணக்காகத் தங்கள் உயிரை நாட்டின் விடுதலைக்குத் தத்தம் செய்தாகவேண்டும். இதுதான் ஐயரின் கற்பனை.

105134

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6 4,60,000—30-1-84.